Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-69 ஐப்பசி, 2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00

## நீதித்துறையே மதிக்கப்படாத நாட்டில் எங்கே இருக்கிறது ஜனநாயகம்?



- நினைவுகளே எங்களுடைய கேடயம்...
- கிராமங்களை அவற்றுக்குரிய கிராமியப் பண்புகளோடு பேணினால் மட்டுமே எல்லோருக்கும் வாழ்வுண்டு
- ஆயுதப் போராட்டத்தினுடைய நியாயத்தன்மைகளை நிரூபித்துள்ள திருகோணமலை இனவெறித் தாக்குதல்

ஆய்வு – அறிவு – நிமிர்வு

# கிழக்கில் சமூக முயற்சியாண்மைக்கு உதாரணமாக விளங்கும் அம்மா பண்ணை




இன்றைய காலகட்டத்தில் 'இருந்த இடத்திலிருந்தே வேலை செய்ய வேண்டும். அலுவலகத்தில் அழகான உடையுடுத்திச் செல்ல வேண்டும். படித்த படிப்பிற்கேற்ற வேலை செய்ய வேண்டும். இல்லையேல் வெளிநாடு செல்ல வேண்டும்' என்று பலர் இருக்கும் போது சிறுதொழில், விவசாயம், சுய தொழில் செய்பவர்கள் மார்தட்டி பெருமை கொள்ள வேண்டும். இவ்வாறான சுயதொழில் பண்ணையான ஒன்று தான் 'அம்மா பண்ணை'.

இலங்கை மக்களின் போசாக்கு உணவுகளில் கோழி முட்டை ஒரு பிரதானமான பாத்திரத்தை வகிக்கிறது. இலங்கையின் முட்டைத்தேவை இங்குள்ள பண்ணைகளாலேயே பெருமளவு திருப்திப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இலங்கையின் அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக பண்ணைகளால் கோழித் தீவனம் இறக்குமதி செய்வதற்கு பணம் இல்லாமல் போனமையின் காரணமாக உள்நாட்டு முட்டை உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டது. இதனையடுத்து சிறிலங்கா அரசாங்கம் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய தீர்மானித்தது. இலங்கையில் நிலவிய உணவு பாதுகாப்பு இன்மையை நிவர்த்தி செய்ய இந்தியா வழங்கிய கடனுதவியின் காரணமாகவே உண்மையில் இந்த இறக்குமதி சாத்தியமானது. அதன்படி 2 மில்லியன் முட்டைகள் 2023 பங்குனி மாதத்தில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. மக்களால் வாங்கக்கூடிய விலையில் முட்டைகள் கிடைக்கச் செய்வதற்காக 92.1 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட இருப்பதாக சிறிலங்கா அமைச்சக பேச்சாளரால் கடந்த ஆவணி மாதம் சொல்லப்பட்டது.

தற்போது நம் நாட்டில் அரசாங்கம் பெரியளவில் முட்டைகளை இறக்குமதி செய்யத் தொடங்கி இருக்கிறது. இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தங்கள் முட்டைகளை விற்க முடியாத நிலை ஏற்படுகின்றது. ஏற்கனவே உள்ளூரில் தீவன விலையேற்றம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் முட்டையிடும் கோழிகளை இறைச்சிக்காக விற்கின்றனர். இது சந்தையில் உள்ளூர் முட்டைகளுக்கு பற்றாக்குறையை ஏற்படுத்துவதாகவும் அமையும். சந்தைக்கு விநியோகிக்கப்படும் இறக்குமதி செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை 35 - 40 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் முட்டைகளில் பெரும் பகுதி வெதுப்பகங்களுக்கும், பாரிய உணவகங்களுக்குமே செல்லும் என சொல்லப்பட்டது. ஆனால் இறக்குமதி முட்டைகள் சந்தையிலும் கிடைக்கின்றன. இதனால் சந்தையில் இந்த முட்டைகளுக்கான கேள்வி அதிகமாக உள்ளது. இதன் காரணமாக தற்போது உள்ளூர் உற்பத்தியாளர் தங்கள் முட்டைகளை உரிய விலைக்கு விற்க முடியாமல் கோழிகளை இறைச்சிக்காக விற்கின்றனர்.

உள்ளூரில் சோள உற்பத்தியை அதிகரித்து, அதனூடாக கோழித் தீவன உற்பத்தியை அதிகரித்து, கோழித் தீவன விலையை குறைத்து கோழிப்பண்ணையாளர்களுக்கு விநியோகித்தால் சந்தையில் 50 - 60 ரூபாய் விற்கும் உள்ளூர் முட்டை விலையை மேலும் குறைக்க முடியும். இதன் மூலம் நுகர்வோரின் வாங்கும் சக்தியை அதிகரித்து பொருளாதார நெருக்கடியில் புரதச்சத்து குறைபாட்டை மக்களிடம் குறைக்க முடியும்.

அதேவேளை, முட்டை இறக்குமதி மார்கழி மாதத்துடன் நிறுத்தப்படும் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர ஐப்பசி மாத தொடக்கத்தில் தெரிவித்து இருக்கிறார். அதனை சிறிலங்கா அரசு செயற்படுத்துமாக இருந்தால் உள்ளூர் முட்டை உற்பத்தியாளர்கள் அதனூடாக பெருமளவு பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கலாம். இந்த இடத்தில் திருகோணமலையில் இருக்கும் "அம்மா பண்ணை" என்ற கோழிப்பண்ணை தொடர்பாக பார்க்கலாம்.

திருகோணமலையிலே நிலாவெளி செல்லும் வழியில் சாம்பல்தீவு சந்தியிலிருந்து சுமார் 1 கிலோமீற்றர் தொலைவில் சல்லி என்கிற பிரதேசத்தில் இந்தப் பண்ணை அமைந்துள்ளது. இப்பண்ணையானது சுயதொழிலாக ஆரம்பிக்கப்பட்டது மட்டுமன்றி, பலரின் வாழ்வாதாரத்திற்கும் உதவும் முகமாகவும் அமைகிறது. இதனால் இது ஒரு சமூக முயற்சியாண்மையாகவும் விளங்குகின்றது. இதன் உரிமையாளர் அவுஸ்திரேலியாவில் இருந்து, இங்கு இருக்கின்ற சுயதொழிலில் ஈடுபடக் கூடியவர்களை இனங்கண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக இதனை அமைத்துள்ளார். அவரின் அம்மாவின் நினைவாகவே இந்த பண்ணைக்கு அம்மா பண்ணை என்று பெயரிட்டுள்ளார். இப்பண்ணை அங்கு பணி புரியும் பணியாளர்கள் தங்குவதற்கான வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்க்கோழி குஞ்சுகள், காடைக் கோழி, வெள்ளடியன், வான் கோழி, பீனிக்ஸ் கோழி, பொலிஸ்கப் கோழி, பிரம்மா கோழி, நில பெண்டம் கோழி, பிராய்லர் கோழி, றோஸ்கப் கோழி, கொச்சின் கோழி உட்பட வாத்துகளையும் அம்மா பண்ணையில் காணலாம். மற்றும் ஆடு, செவி ஆடு என்பனவும் காணப்படுகின்றன. அங்கு வேலை செய்யும் தொழிலாளி ஒருவர், கொரோனா காலத்திற்குப் பிற்பாடு ஏற்பட்ட கஷ்ட நிலையில் இருக்கும் போது வெளிநாட்டில் வசிக்கும் தனது மருமகள் இந்தப் பண்ணை ஆரம்பிப்பதற்கான வேலைகளை அவரின் தாயின் நினைவாக அமைத்துக் கொடுத்ததாக சொன்னார். மேலும், பலரின் வாழ்வாதார உதவிக்காக கோழிக்குஞ்சுகளை இலவசமாக கொடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதுமட்டுமன்றி உள்ளூரிலேயே இயற்கை வழியில் இரசாயனமற்ற கோழி இறைச்சிகள் கிடைக்க அம்மா பண்ணை வழிவகுத்திருக்கிறது. நகர்ப்புறம் சென்று இரசாயனம் கலந்து உருவாக்கப்பட்ட ஆரோக்கியமற்ற இறைச்சிகளை கொள்வனவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அதுமட்டுமன்றி பிராய்லர் கோழிகளை வியாபார நோக்கில் வளர்ப்பதாகவும் ஏனைய கோழிகள், ஆடுகள் என்பன நம் ஊர் மக்களுக்காகவும் மற்றும் சல்லி கிராமத்தை சுற்றியுள்ள மக்கள் நலன் பெறுவதற்காகவும் வளர்ப்பதாகவும் பண்ணையின் பொறுப்பாளர் குறிப்பிட்டார்.

( 12 ஆம் பக்கம் பார்க்கவும் )

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

# ஆசிரியர் பார்வை

## ஒடுக்கப்படும் பாலஸ்தீனிய மக்களுக்காக குரல் கொடுப்பது அவசியமானது

இன்று இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர் உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. அன்று முள்ளிவாய்க்காலில் மிகச் சிறிய நிலப்பரப்புக்குள் தமிழ் மக்கள் முடக்கப்பட்டு இனப்படுகொலை நடாத்தப்பட்டமை போன்றதொரு நிலையே இன்று காஸாவில் பாலஸ்தீனர்களுக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஐ.நா போன்ற மத்தியஸ்த நிறுவனங்கள் கைகட்டி நிற்க பெரும் மனித அவலம் காஸாவில் அரங்கேறுகிறது. ஈழத்து இறுதிப்போரில் வைத்தியசாலைகள் இலக்கு வைத்து தாக்கப்பட்டமை போன்று காஸாவிலும் வைத்தியசாலைகள் தாக்கப்படுகின்றன. உலகப் போரியல் விதிகளின்படி வைத்தியசாலைகள் விலக்களிக்கப்பட்ட மனிதாபிமான இடங்களாக உள்ளன. அவற்றை அன்று சிறீலங்காவும் இன்று இஸ்ரேலும் கருத்தில் கொண்டதாக தெரியவில்லை.

மேற்குலக அரசாங்கங்கள் 'தன்னை பாதுகாத்துக் கொள்ள இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது' என்ற சுலோகத்தை மந்திரம் போல உச்சரித்துக் கொண்டு இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளுக்கு துணை போகின்றன. ஆனால் உற்றுக் கவனித்தால் இன்று இஸ்ரேல் முன்னெடுப்பது தனது பாதுகாப்புக்கான யுத்தம் அல்ல, அது ஒரு இனவழிப்புக்கான யுத்தம். ஹமாஸ் இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் தாங்கள் போடும் குண்டுகளால் கொல்லப்படப் போவது அப்பாவி பொதுமக்கள் தான் என்பது இஸ்ரேலுக்கு நன்றாகவே தெரியும். மேற்குலக அரசாங்கங்களுக்கும் நன்றாகவே தெரியும். பாலஸ்தீன மக்கள் தானே ஹமாசுக்கு புகலிடம் கொடுக்கிறார்கள் அவர்கள் கொல்லப்பட்டால் அதற்கு இஸ்ரேல் பொறுப்பல்ல என்ற வாதமும், போர் என்று வந்து விட்டால் பொதுமக்களின் உயிர் இழப்புகள் தவிர்க்க முடியாதவை என்ற வாதமும் மேற்குலகத்தால் ஊடகங்களில் சொல்லப்படுகின்றன. இஸ்ரேல் அரசுக்கு எதிராக வைக்கப்படும் கருத்துகளை இரண்டாம் உலகப் போரின் போது இனவழிப்புக்கு உள்ளான யூத மக்களுக்கு எதிரான கருத்துகள் என்று மடைமாற்றம் செய்யும் முயற்சிகள் நடக்கின்றன. இவை எல்லாம் இந்த அரசுகள் மனிதாபிமானமற்றவை என்பதை மேலும் மேலும் எமக்கு பறைசாற்றுகின்றன.

மனிதாபிமானம் பற்றி கதைக்கும் பொழுது ஹமாஸ் இஸ்ரேலிய பொதுமக்களை இலக்கு வைத்தது பெரும் கண்டனத்துக்கு உரியது. ஆனால் தனது பாதுகாப்பு என்ற போர்வையில் பாலஸ்தீன மக்களின் நிலங்களை பறித்து அவர்களை கொன்று கொஞ்சம் கொஞ்சமாக அந்த மக்களை இனவழிப்பு செய்வதன் விளைவு இதுவாகத்தான் இருக்கும் என்பதை அறிவுள்ள எவரும் எதிர்பார்ப்பர். அந்த மறுவினையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி தமது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள இஸ்ரேலிய அரசும் மேற்குலக அரசுகளும் நடந்து கொள்ளும் விதம் அதைவிட கண்டனத்துக்கு உரியது. ஈழத்திலும், பாலஸ்தீனத்திலும் மக்கள் முன்னெடுப்பது தமது நிலத்தை பாதுகாக்கும் போராட்டமே. அதற்கு எதிராக சிறிலங்கா அரசும் இஸ்ரேல் அரசும் செய்வது மக்களின் நிலத்தை பறித்து இனத்தை அழிக்கும் செயற்பாடே. இதன் உச்சக்கட்டமாக இலட்சக்கணக்கான மக்களை உடன் காசாவிலிருந்து வெளியேறுமாறு இஸ்ரேலிய இராணுவம் உத்தரவிட்டுள்ளது. இன்று மேற்குலகமும் அதன் ஊடகங்களும் காஸாவில் நடக்கும் மனிதப்பேரவலங்களை வெளியில் கொண்டு வரவில்லை. ஆனால், இன்று சமூக வலைத்தளங்கள் கோலோச்சும் காலமாகையால் உலகெங்கும் இந்த அழிவுகள் உடனுக்குடன் காணொளிகள், படங்களாக மக்களை சென்றடைகின்றன.

இதனை தொடர்ந்தும் உலகின் பல நாடுகளிலும் மக்கள் கிளர்ந்தெழுந்து பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக போராடி வருகிறார்கள். இலங்கையில் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இப்போது தான் சிறிய அளவிலான இரு ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. இந்த ஆர்ப்பாட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். ஈழத்தில் மட்டுமல்லாமல் புலம்பெயர் நாடுகளிலும் ஈழத்தமிழர் தமது தலைமையில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க வேண்டும். மற்றைய சமூகத்தவர் நடத்தும் போராட்டங்களில் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டும். ஈழத்தமிழருக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என்று நாம் மேற்குலகத்தை கேட்டு வருகின்ற இவ்வேளையில் பாலஸ்தீன மக்களுக்கு நாம் ஆதரவு அளித்தால் மேற்குலகம் எம்மை கைவிட்டு விடும், ஆகவே இஸ்ரேலுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று ஒரு சாரார் நினைக்கிறார்கள். இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்காவிட்டாலும் பரவாயில்லை நடுநிலைமையில் தான் நாம் இருக்க வேண்டும் என்று இன்னொரு சாரார் கருதுகிறார்கள். ஈழத்தமிழரின் போராட்டம் அடிப்படையில் நியாயமானது. அது ஒருபொழுதும் அநியாயங்களை பொறுத்துக் கொண்டோ அவற்றுக்கு துணை போகவோ கூடாது. அது நீண்ட காலப் போக்கில் எம்மை அழிவுக்கே இட்டுச் செல்லும். இன்றைய மேற்குலகமும் நீண்ட காலப் போக்கில் இப்படியே இருந்து விடப் போவதில்லை. அந்த வகையில், உலகில் இன்று நிலவும் தட்பவெப்ப சூழலுக்கு ஏற்ப நமது நீண்ட கால நிலைப்பாட்டை நாம் மாற்ற கூடாது. நீதியையும் நியாயத்தையும் அறத்தையும் நாம் கைவிடக் கூடாது. ஈழத்தமிழ் மக்களும் இந்த தீவில் தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்டு வரும் இனம் என்கிற அடிப்படையில் இஸ்ரேலால் கடுமையாக ஒடுக்கப்படும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவும், போராடவும் வேண்டியது எமது தார்மீக கடமையாகும்.

-செ. கிரிசாந்-

# நீதித்துறையே மதிக்கப்படாத நாட்டில் எங்கே இருக்கிறது ஜனநாயகம் ?




தொகுப்பு - ஈழவன்

**அருட்பணி SDP செல்வன் - யாழ் குருமுதல்வர் - இலங்கை திருச்சபை**

இன்று எங்கள் மத்தியிலே நிகழ்ந்து கொண்டிருக்கின்ற எல்லா சிக்கல்களுக்கும் அடிப்படையாக இருக்கும் இனப் பிரச்சனைக்கு முறையான தீர்வு வர வேண்டும். அது இல்லாமல் வருகின்ற மற்ற பிரச்சனைகள் எல்லாவற்றையும் கையாள முயற்சிப்பதிலே எந்தவித மாற்றமும் வரப்போவதில்லை. இன்னொரு விதத்திலே சொல்லப்போனால் இன்றைக்கு வருகின்ற அன்றாட பிரச்சனைகள் எல்லாம் இனப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு இல்லாமல் வருகின்ற பிரச்சனைகள். ஒவ்வொரு பிரச்சனைகளையும் பார்த்து என்ன செய்வது என்று தெரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருப்பது தான் இன்றைய நிலை. முல்லைத்தீவு நீதிபதி அவர்கள் பதவி விலகுகிறார் என்றால் எதனை சொல்வது? நீதித்துறைக்கு எவ்வளவு முக்கியத்துவம் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது சர்வதேச ரீதியாக இருட்டடிப்பு செய்யப்படுகிறது. நீதித்துறையை மதிக்காத ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நிலையை வைத்துக் கொண்டு நாங்கள் எதையும் செய்ய முடியாது. நாட்டிலே எங்கே ஜனநாயகம்? ஜனநாயக உரிமைகள் எங்கே? நீதிக்கு உரிமை இல்லாத நிலை தான் இங்கே இருக்கிறது. இதற்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். ஜெனிவாவிலே என்ன நடக்கிறது? இலங்கையினுடைய இனப் பிரச்சனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலே பாரப்படுத்தப்படாமல் மனித உரிமைகள் ஆணையத்தோடு எத்தனை வருடங்களாக வைக்கப்பட்டு கொண்டிருக்கிறது? நாங்களும் அதிலே நன்மை வரும் நன்மை வரும் என்று ஐ.நாவை பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் எந்தவித நன்மையும் வரவில்லை. அந்த நேரத்திலே எங்களுடைய மக்கள் ஐ.நாவினால் நன்மை வரும் என்று பார்த்து கிடந்தனர். எதுவும் கிடைக்காமல் முள்ளிவாய்க்காலிலே முடிந்தது. அப்படியிருக்க இன்றைய நிலையிலும் கூட நாங்கள் ஐ.நா சபையிலே நம்பிக்கை வைப்பது அர்த்தமுள்ளதா என்ற கேள்வியை கூட கேட்க வேண்டி இருக்கிறது.

அடுத்தபடியாக, பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்று ஒன்றை கொண்டுவர பார்க்கிறார்கள். ஆனால் பயங்கரவாத தடை சட்டத்தை விட மோசமான ஒன்றை தான் கொண்டுவர இருக்கிறார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு சர்வதேச ரீதியாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் அது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக திரும்பவும் வருகிறது. ஆகவே எங்கே மனித நேயம்? எங்கே உரிமைகள்? எல்லாம் பாரிய பிரச்சனைகள். அதுமட்டுமல்ல சமூக ஊடகம் இன்று ஓரளவுக்கு நன்மையை, நீதியை குறிப்பிடுவதாக இருக்கிறது. ஆனால் அதற்கும் இன்றைக்கு இடம் இல்லாமல் போகிறது. இப்பொழுது கொண்டு வரப்படுகின்ற சமூக ஊடக பாதுகாப்பு சட்ட மூலம் எங்களுடைய உரிமைகளுக்கும் எங்களுடைய கருத்து சுதந்திரத்திற்கும் எதிரானது. ஆகவே இதனை நிராகரிப்பதற்கும் நாங்கள் ஒன்று சேர்வது மிகவும் முக்கியம். ஆகவே இன்றைய அன்றாட பிரச்சனைகளுக்கு எதிராக போராடுவதுடன் நாங்கள் எல்லோரும் இலங்கையிலே எல்லா உரிமைகளோடும் வாழுகின்ற நிலை வரும் வரையும் நாங்கள் போராடிக் கொண்டே இருக்க வேண்டும்.

**அருட்பணி ராஜ்குமார் யாழ்.பல்கலைக்கழக சிற்றாலயம்**

ஜெனிவாவிலே 56 வது கூட்டத்தொடர் நடைபெற்று கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து நீதவான் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து அரசியல் தஞ்சம் கோரி இருப்பது மிக மிக வருத்தத்திற்குரியது. அதற்கு பின்னால் இருக்கின்ற அச்சுறுத்தல்கள், எச்சரிக்கைகள் ஒவ்வொன்றையும் ஒரு சாமானிய சமூகமாக அல்லது ஒரு திருச்சபையின் குருவாக இருந்து பார்க்கின்ற போது இந்த நாட்டிலே நீதித் துறையில் உள்ள ஒரு சட்டவாளருக்கு அல்லது ஒரு நீதவானுக்கு எவ்வளவு அச்சுறுத்தல், எவ்வளவு அழுத்தம் உள்ளது என்பது புலனாகின்றது. ஜெனிவாவிலே கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கின்ற போது, கடந்த 14 வருடங்களாக தமிழர் தாயகத்தில் நடைபெற்ற எல்லா இன்னல்களையும் துன்பங்களையும் எடுத்து பேசப்படுகின்ற இச்சந்தர்ப்பத்தில், குறிப்பாக ஒரு நீதவான் வெளியேறி இருக்கின்றமை ஒரு சாதாரண விடயம் அல்ல. ஒரு நீதவானுக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்றால் சாதாரண குடிமகன் எவ்வாறு வாழ முடியும்? ஒருபுறம் இலங்கைத் தீவை பார்க்கின்ற போது மதவாதம் எல்லை தாண்டியதாக இருக்கின்றது. அதுமாத்திரமன்றி மறுபுறம் பார்ப்போமாக இருந்தால் எல்லையோர கிராமங்கள் எல்லாம் அச்சுறுத்தப்பட்டு குடியேற்றங்கள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. பாரம்பரியமாக ஒரு சமயத்தை பின்பற்றும் மக்கள் வாழ்விடங்களாக கொண்டு வாழ்ந்த இடங்கள் எல்லாம் புதிய புதிய சமய செல்நெறிக்குள்ளாக ஆக்கிரமிப்புக்குள் செல்கின்ற போது ஒரு நீதவான் வெளியேறி இருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் தான் இந்த இலங்கை நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகின்றதா? அல்லது ஜனநாயகத்தின் பண்புகள் நீதிமன்றங்களில் காணப்படுகின்றதா? அல்லது இந்த நாட்டிலே ஒரு பேரினவாதத்தின் அடிப்படை கூறுகள் தான் பாராளுமன்றத்திலும் சட்டத்திற்குள்ளும் காணப்படுகின்றதா? என்று பல கேள்விகள் கேட்கப்பட வேண்டியதாக இருக்கின்றன. எனவே இவ்வாறான விடயங்களில் ஜனாதிபதி தன்னுடைய தனித்துவமான அதிகாரத்தினால் குறிப்பாக நீதவான்கள் மற்றும் சாதாரண குடிமக்கள் எல்லோருக்கும் ஒரு சிவில் பாதுகாப்பை நிலைநாட்ட முன்வர வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கையாக இருக்கின்றது. அது மாத்திரமல்ல நீதிமன்றங்களுக்குள் சமயவாதிகளோ, அரசியல்வாதிகளோ மற்றும் ஏனைய பெரும்பான்மை மொழி பேசுகின்றவர்களோ அச்சுறுத்தல்களை செய்வதையோ சவால்களை விடுவதையோ, எச்சரிப்புகள் செய்வதையோ முற்றாக தடுக்க வேண்டும்.

குறிப்பாக இங்கிருந்து வெளியேறிய நீதவான் குறித்து பாராளுமன்றத்திலே அதிகமாக பேசப்பட்டு இருக்கிறது மிக வருந்தத்தக்கது. அவருடைய தீர்ப்புகளை பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது வேதனைக்குரியது. இவ்வாறான பல விடயங்கள் இன்று பேசப்பட்டு கொண்டிருந்தாலும் இன்னும் எவ்வாறான விடயங்கள் எங்களுடைய நாட்டிலும் நீதித்துறையிலும் நடைபெறப் போகிறது என்பது குறித்து மக்கள் பயத்தில் இருக்கிறார்கள். நாட்டின் ஜனாதிபதியும் சர்வதேசமும் குறிப்பாக இலங்கை நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவற்றை கவனத்தில் எடுத்து எதிர்வரும் காலங்களில் இங்கிருந்து மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு செல்வதோ அல்லது நீதித்துறை சார்ந்தவர்கள் தப்பித்து தஞ்சம் கோரி போகின்ற சூழல்களோ உருவாகாத வண்ணமாக எல்லா மக்களும் இந்த மண்ணிலே வாழ்வதற்கு ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்கி கொடுக்க வேண்டும். இது அவர்களது தார்மீக கடமை. அதனையே இந்த இடத்திலே வேண்டி நிற்கின்றோம்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - நாடாளுமன்ற உறுப்பினர் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**

நீதவான் சரவணராஜாவினுடைய பதவி விலகலும் அவர் நாட்டை விட்டு வெளியேறிய விட

யமும் உண்மையிலே இலங்கையினுடைய அடக்கு முறையின் ஒரு புது அங்கத்தை வெளிப்படுத்தி இருக்கின்றன. இதுவரைக்கும் இலங்கை உலகத் திற்கு தாங்கள் ஒரு ஜனநாயகத்தை பேணுகி ன்ற நாடு எனவும் சட்டத்தின் ஆட்சியையும் நல் லாட்சியையும் கடைபிடிக்கின்ற ஒரு நாடாகவும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். மேலும், பயங் கரவாதத்தை ஆதரிப்போருக்கும் 2009 க்கு பிறகு அந்த பயங்கரவாதத்தை மீள் உருவாக் கம் செய்வது என்ற நோக்கத்தோடு செயல்படு கின்றவர்களுக்கும் எதிராக மட்டும் தான் தாங் கள் நடவடிக்கை எடுப்பதாகவும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். தாங்கள் முழுமையாக ஒரு நீதியையும் நியாயத்தையும் ஏற்று செயல்படு கின்ற ஒரு தரப்பாகவும் தான் இருப்பதாக காட்டிக்கொண்டு வந்தார்கள். ஆனால் சரவண ராஜாவின் விடயம் இந்த கபட நாடகத்தை முற்று முழுதாக அம்பலப்படுத்துகின்றதாகவும் அத் தோடு இலங்கையிலே தொடர்ந்தும் ஒரு சிங்கள பௌத்தத்தினுடைய இனவாத போக்கை தவிர் ந்த வேறு எந்தவொரு செயல்பாட்டிற்கும் இடமே கிடையாது என்பதையும் காட்டுகின்றது.

நீதித்துறை அந்த சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு முற்றுமுழுதாக அடிபணிந்து செயல்படுகின்ற ஒரு துறையாக அமைந்துள்ளது. ஆகவே தமிழர்களுக்கு அல்லது முஸ்லிம்களுக்கு அல்லது சிங்கள பௌத்தம் அல்லாத வேறு எந்த வொரு தரப்பிற்கும் இலங்கையிலே நீதி நியா யத்தை தேட முடியாது என்ற விடயம் இந்த நீதவான் சரவணராஜாவினுடைய பாதிப்பு ஊடாக நிரூபிக்கப்பட்டும் இருக்கின்றது. அந்தவகையிலே அவர் உறுதியாகவும் துணிந்தும் ஒரு நீதிக்காக எடுத்த முடிவுகளிற்கு பாராட்டை தெரிவிக்கின்ற அதே சமயம் அவருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற மோசமான இனவாத செயற் பாடுகள் அச்சுறுத்தல்கள் அடிபணிய வைக்க கூடிய முயற்சிகள் போன்ற அனைத்தையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகிய நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

அத்தோடு நானும் எங்களுடைய செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அவர்களும் தற்போது ஜெனிவா மற்றும் ஐரோப்பியா நாடுகளின் தலை நகரங்களுக்கும் சென்று கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலே நீதவான் சரவணராஜா அவர்க ளினுடைய இந்த சம்பவத்தை இங்கு பதிவு செய்து கொண்டு வருகின்றோம். இது ஒரு கண் திறக்கின்ற செயற்பாடாக தான் சர்வதேசம் பார்க்க வேண்டும் என்ற ஒரு கருத்தையும் நாங்கள் வைத் திருக்கின்றோம்.

**சிவஞானம் சிறீதரன் - நாடாளுமன்ற உறுப்பினர் - தமிழரசுக் கட்சி**

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா அவர்கள், தன் மீது தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டு வந்த அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, தனது பதவி யையும், பொறுப்புகளையும் துறந்துள்ளமை, இந்த நாட்டின் நீதித்துறையினது சுயாதீன இயங்கு நிலையை அடியோடு ஆட்டம் காணச் செய்துள் ளது. நீதிபதி சரவணராஜா அவர்கள் கடந்த 2023.07.04 ஆம் திகதி தனது கடமை நிமித்தம் குருந்தூர் மலைக்கு விஜயம் செய்திருந்த போது தெரிவித்த கருத்துகளை மேற்கோள்காட்டி 2023.07.07 ஆம் திகதி நாடாளுமன்ற உரையிலும், அதன் பின்னர் பொதுவெளியிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர அவதூறுக்கு உள்ளாக்கியிருந்தார். அதன் பின்னர் குருந்தூர் மலையில் தமிழர்கள் வழிபாடியற்றுவதற்கு, சட்ட வரைமுறைகளுக்கு உட்பட்டு நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சி யான அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியுள்ளமை இந்த நாட்டின் நீதித்துறைக்கும், ஜனநாயகத்துக்கும் விழுந்திருக்கிற சாட்டையடி மட்டுமல்ல, இதை மிக மோசமான இனவாதச் செயலாகவே கருத வேண்டியுள்ளது. இதற்கு, எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கிறேன்.

2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப் பாண மாவட்ட நீதிபதியாக இருந்த திருமதி.சிறீநிதி நந்தசேகரன் அவர்கள் மீது, இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியை அடி யொற்றி, மீளவும் வடக்கின் தமிழ் நீதிபதி ஒரு வர் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இத் தகையதொரு உயிர் அச்சுறுத்தல், இலங்கையின் நீதித்துறையின் இயங்குநிலையும் மெல்லமெல்ல இராணுவமயப்படுத்தப்படுவதற்கான எத்தனமாகவே தென்படுகிறது. நீதித்துறையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இந்த நாட்டில், இன, மத ஆக் கிரமிப்புகளும், அடக்குமுறைகளும் எத்தனை வீரியமாய் இருக்கும் என்பது பற்றி, சர்வதேச சமூகம் இனியேனும் கூருணர்வோடு செயலாற்ற வேண்டும் என்றும், இத்தகையதொரு நிலை, இன்னு மோர் தமிழ் நீதிபதிக்கு ஏற்படாதிருக்க வழிவகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

# நினைவுகளே எங்களுடைய கேடயம்...



தொகுப்பு - ரஜீந்தினி

**நூ**லியலாளர் என். செல்வராஜாவின் யாழ்ப்பாணம் பொது நூலக வரலாறு தொடர்பிலான பல்வேறு அரிய தகவல்களையும் கொண்ட 'Rising from the Ashes' என்ற ஆங்கில நூலும், 'யாழ்ப்பாண பொது நூலகம்' என்கிற தமிழ் நூலினதும் வெளியீட்டு விழா 18.07.2023 செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. Rising from the Ashes நூல் பற்றிய கருத்துரையினை கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தினார். அதில் நினைவுகளை எதிர்கால தலைமுறைகளுக்கு கடத்துவது எவ்வளவு முக்கியமானது என்பதனை பதிவு செய்தார். அவரது கருத்துகளின் தொகுப்பை இங்கு தருகிறோம்.

இந்த நூல் வெளியீடு யாழ். பொது நூலகத்தினுடைய முக்கியமான ஒரு நிகழ்வு. இந்த நூலகத்தின் வரலாற்றுத் தகவல்கள் பலவற்றை நான் இந்தப் புத்தகத்தில் இருந்து தான் பெற்றுக் கொண்டேன். இந்த நூலகம் 1934 ஆம் ஆண்டளவில் ஆஸ்பத்திரி வீதியில் இப்போது ஒசுசல மருந்து விற்பனை நிலையத்திற்கு எதிராக இருந்த ஒரு வீட்டில் தொடங்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. இரண்டு ஆண்டுகளின் பின்னர் அப்பொழுது கட்டப்பட்டுக் கொண்டிருந்த மாநகர சபை கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது.

1953 ஆம் ஆண்டில் இரண்டு முக்கிய பிரமுகர்கள் அதை வலுப்படுத்துவதில் சம்பந் தப்பட்டிருந்தார்கள். ஒருவர் அப்பொழுது மாந கர சபையின் நகரபிதாவாக இருந்த சாம். அ.சபாபதி. மற்றையவர் வணக்கத்துக்குரிய பிதா லோங். அப்பொழுது யாழ்ப்பாணத்திற்கு ஒரு நவீன நூலகம் வேண்டுமென்ற கோரிக்கை தமிழ்நாடு வரை ஒலித்தது. அதனைக் கேட்ட கே.எஸ் நரசிம்மன் என்ற சிற்பி இந்த நூலகத்தை வடிவமைத்தார். 50 களின் பிற்பகுதியில் இதன் முதல் கட்டம் நிறைவு செய்யப்பட்டு அங்கு இயங்க தொடங்கியது.

1971 இல் கேட்போர் கூடம் வந்தது. அதற்கு பிறகு தான் அந்த கொடுமை நடந்தது. 1981 இல் இந்த நூலகம் எரியூட்டப்பட்டது. அதற்கு நாங்கள் பலர் சாட்சி. அப்போது பெரும் அதிர்ச்சி அடைந்திருந்தோம். இது எங்கள் காலத்தில் நடந்த துயரம். யாழ்ப்பாண பல் கலைக்கழகத்தில் இளம் மாணவனாக இரு ந்த சேரன் 'முகில்களின் மீது நெருப்பு தன் செய்தியை எழுதி ஆயிற்று, இன்னும் எதற் காக காத்துக் கொண்டு இருக்கிறீர்கள்?' என்று ஒரு கவிதை எழுதினார். யாழ் பல்கலைக்கழ கத்தில் விரிவுரையாளராக இருந்த எம்.ஏ நுஹ்மான் புத்தரின் படுகொலை என்று தமிழில் ஒரு கவிதை எழுதினார். அது தமிழ் வாசகர் பரப்புக்கு தெரிந்திருந்தது. நான் அதை ஓரிரு ஆண்டுக்குள் Murder என்று ஆங்கிலப்படுத்தி எழுதினேன். அதற்கு பிறகு தென்னிலங்கைக்கு இந்த கவிதை தெரிய வந்தது. Poetry from Sri Lanka என்கிற பெங்குவின் வெளியீட்டில் அந்த கவிதையும் இடம்பெற்றிருந்தது.

செல்வராஜா எழுதிய இந்த தொகுதி ஒரு முக்கியமான ஆவணம். இந்த நூலகம் எரியூட்டப்பட்டதை தொடர்ந்து இங்கே இருந்த யாழ்ப்பாண பத்திரிகைகளிலே, கொழும்பு பத் திரிகைகளிலே, வெளிநாட்டு பத்திரிகைகளிலே வந்தவை, ஆய்வாளர்கள் சொன்னவை, எரியூட் டிய படை தரப்பினர் சொன்னவை அனைத்தையும் சேர்த்திருக்கிறார். இந்த நேர்மையை பாராட்ட வேண்டும். எட்வின் குணவர்தனா என்ற சிங்கள வர் சொல்கிறார், 'இது என்ன பேக்கதை? எங் களுடைய படை ஏன் நூலகத்தை எரிக்க போகிறது? இது விடுதலைப்புலிகள் எரித்தது' என்று. அதுவும் இந்த புத்தகத்தில் இருக்கிறது. அவருக்கு இன்னொருவர் பதில் எழுதி இருக் கிறார், 'விடுதலைப்புலிகளுக்கு இதை எரிக்க வேண்டிய தேவை எதுவும் இல்லை. ஏனென்றால் அவர்கள் தமிழ் இனத்தின் தனி சுதந்திரத்திற்கு அவர்களுடைய விடுதலையை நோக்கிய பயணத் தில் ஈடுபட்டு கொண்டிருக்கின்றவர்கள். தமிழ் இனத்தின் கலாசார சின்னமாக, அடையாளமாக இருக்கின்ற ஒன்றை கடைசிவரை அவர்கள் எரிக்க மாட்டார்கள்' என்று.

கிருஷ்ணதாசன் என்று ஒரு காவல்துறை அதிகாரி ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். அவர் ஒரு கண்ணால் கண்ட சாட்சி. காமினி திஸ்ஸா நாயக்க, சிறில் மத்தியூ என்ற இரண்டு அமைச் சர்கள் தலைமையின் கீழ் எரித்தது பொலிஸ் காரர் தான் என்று எழுதியிருக்கிறார். இவை 80 க்கு பிறகு பிறந்தவர்கள் அறிந்திருக்க வேண்டி யவை. எங்களுடைய வரலாறு தான் எங்களு க்கு கேடயம்.

இலங்கையில் ஒரு பெண்மணி வாழ்ந்தார். யூத இனத்தை சேர்ந்த அவளுடைய பெற்றோர் இரண்டு பேரும் ஹிட்லரினால் கொல்லப்பட்ட பின் 10,11 வயது சிறுமியான அவள் இங்கிலாந்துக்கு தப்பி சென்றாள். அங்கு தாதியாக வேலை செய்த காலத்திலே அங்கு சென்ற சிங்கள வைத்தியரை காதலித்து திருமணம் செய்தார். இலங்கையை தன்னுடைய வாழிடமாக கொண்டு இருந்த அவர் அண்மையில் 4,5 வருடத்திற்கு முன் தான் காலமாகினார். அவர் ஹிட்லரினது அநியாயத்தை பற்றி பலமுறை எழுதியவர். 1983 ஆம் ஆண்டு கொழும்பில் கடைகள், வீடுகள் எல்லாவற்றுக்கும் மேலே புகை கிளம்பியதை பார்த்த போது எனக்கு ஜேர்மனியினுடைய இன சங்கார (holocaust) முகாம்களிலிருந்து எழும்பிய புகை தான் நினைவுக்கு வந்தது என்று அவர் எழுதினார். சிங்கள மக்களுக்கு இது பெரும் அசௌகரியமாக இருந்தது. கொழும்பில் ஜேர் மன் கலாசார மையம் நடத்திய கண்காட்சி ஒன்று நடந்தது. அதில் நிறைய யூதர்கள் மீது இன சங்காரம் நடத்தப்பட்ட ஏராளமான படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அதில் அந்த பெண்மணியினுடைய ஆக்கங்களும் இருந்தன. அப்போது ஒரு ஊடகவியலாளர் 'யூதர்கள் கொல்லப்பட்ட காலம் முடிந்து 40 வருடங்கள் கழிந்து விட்டது. இதனையே எவ்வளவு காலம் சொல்லி கொண்டு இருக்க போகிறீர்கள்?' என்று

> நூலகம் எரிக்கப்பட்ட நினைவுகள் தான் எங்களுடைய கேடயம், எங்களுக்கு என்ன நடந்தது என்பதை சொல்ல வேண்டும். எங்களுடைய இனம் மறக்க கூடாது.

கேட்டார். அதற்கு அந்த பெண்மணி கூறிய மறுமொழி, "நினைவுகள் தான் எங்களுடைய கேடயம்". "எங்களுக்கு என்ன நடந்தது என் பதை சொல்ல வேண்டும். எங்களுடைய இனம் மறக்க கூடாது" என்று.

ஆபிரிக்காவில் பிடித்து கொண்டு செல்லப் பட்ட கறுப்பின மக்கள் தென் அமெரிக்காவின் தோட்டங்களிலே அடிமைகளாக வைத்து வேலை வாங்கப்பட்டார்கள். 18 ஆம் நூற்றாண்டிலே அடிமை வியாபாரம் உச்சமாக இருந்த காலத் திலே அங்கே ஒரு கறுப்பினத்தவள் கலப்பினத் தவரை திருமணம் செய்து கொண்டாள். தலை முறை தலைமுறையாக அவர்கள் அடிமையாக இருந்தார்கள். அவள் தன்னுடைய பிள்ளைகளு க்கு தான், தன்னுடைய தந்தை, பாட்டன் ஆகி யோர் அடிமைகளாக ஆபிரிக்காவிலே பிடிக்கப்பட் டது, கப்பலிலே ஏற்றி இங்கிலாந்திற்கு கொண்டு போகப்பட்டது, அங்கே சந்தையிலே விற்கப்பட் டது, தென் அமெரிக்காவின் புகையிலை தோட் டங்களில் இறக்கப்பட்டது என்று தங்களுடைய தலைமுறைக்கு என்ன நடந்தது என்பதனை சொல்லி வளர்த்தாள். அந்த பிள்ளைகள் தமது பிள்ளைகளுக்கு சொன்னார்கள். வரிசை யாக சொல்லி 5 தலைமுறையாகி விட்டது. குர்ரா கில்ரே, குர்ரா கில்ரேயின் மகன் இவர், அவரினுடைய மகன் இவர் என்று சொல்லிக் கொண்டே நீண்டது.

அந்த பரம்பரையிலே வந்த ஒரு அமெரிக் கன் படித்து பட்டதாரி ஆகி ஒரு நிருபராக இருக்கிறான். இவனுடைய காதில் தனது தாய் சொன்ன பெயர் பட்டியல் கேட்டுக் கொண்டே இருக்கிறது. என்ன செய்யலாம் இனி? ஏழு தலைமுறையாகி விட்டது. அவன் என்ன செய் தான் என்றால், ஐக்கிய நாடுகள் வளாகத்தில் எல்லா நாட்டின் பிரதிநிதிகளும் கூடுகிற இடத் தில் நின்று கொள்வான். தனக்கு பாட்டி, பூட்டி சொன்ன பெயர்களை மந்திரம் சொல்வது போல சொல்லிக் கொண்டிருப்பான். அவர்கள் இவனை ஒரு மாதிரியாக பார்ப்பார்கள். மொழி யும் விளங்கவில்லை.

ஒருநாள் அவனிடம் ஒருவர் கேட்டார், உன்னுடைய பிரச்சனை என்ன? என்று. 'நான் சொல்கின்ற சொற்கள், பெயர்கள் எந்த மொழி என்று நான் அறிய வேண்டும்.' என்று அவன் கூறினான். அதற்கு அவர் சொன்னார், 'நீ இதை அறிவதாக இருந்தால் ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் ஆபிரிக்க மொழிகளிலே ஆய்வு செய்த ஒரு பேராசிரியர் இருக்கிறார். அவரிடம் போ' என்று. அவன் அவரை தேடி பிடித்தான். அவரிடம் இந்த பட்டியலை சொன் னான். அவர் 'நீ சொல்கின்ற சொற்கள் ஆபி ரிக்காவின் குறித்த பகுதியில் வழக்கத்திலிருக் கின்ற இந்த மொழியாக இருக்கலாம்' என்று சொன்னார். இவன் அடுத்த நிமிடமே ஆபிரிக் காவிற்கு போனான்.

அந்த சிறிய இனக் குழுவை தேடிப் பிடித் தான். இவனோ ஒரு அரை வெள்ளையன். அந்த மக்களுக்கு இந்த சொற்களை சொன்னான். உடனே ஒரு அற்புதம் நடந்தது. அந்த குழுவில் உள்ள எல்லோரும் பெரிய வட்டம் போட்டு ஒரு புராதன ஆபிரிக்க நடனத்தை ஆடினார்கள். அது ஏனென்று அறிந்த பொழுது 'நம் இனத்தவன் வந்துவிட்டான்' என்ற மகிழ்ச்சியில் அவர்கள் ஆடிய நடனம் அது. இந்த கதைக்கு பெயர் வேர்கள்.

இதையும் சொல்லி இங்கே வாழ்ந்த யூத பெண்மணி சொன்ன "நினைவுகள் தான் எங்களு டைய கேடயம்" என்பதையும் ஏன் சொல்கி றேன் என்றால் இந்த நூலகம் எரிக்கப்பட்ட நினைவுகள் எங்களுக்கு கேடயம். இதை நாங் கள் மறக்க கூடாது.

நூலகம் எரிக்கப்பட்ட பின் இரண்டாவது நாள் எதிர் கட்சி தலைவராக இருந்த அமிர்தலிங் கம் பேசிய பேச்சும் அதற்கு ஜீவித புஞ்சி

நிலமே என்று ஒருவர் பேசிய எதிர்ப் பேச்சும் இந்த நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன காலத்தில் இருந்த இரண்டு அமைச்சர்கள், சிறில் மத்தியூ, காமினி திஸ்ஸாநாயக்க ஆகியவர்கள் இங்கே நிற்கின்ற வேளையில் தான் இது நடந்தது.

ஆங்கில பத்திரிகையில் ஆசிரியராக சிவநாயகம் என்று ஒருவர் இருந்தார். அவர் தமிழ் மக்களின் பிரச்சனை பற்றி கருத்து தெரிவித்த அமெரிக்க தூதுவர் ஒருவருக்கு ஒரு கடிதத்தை பத்திரிகையில் எழுதி இருக்கிறார். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு பிரச்சனை விளங்குவதில்லை. எல்லாம் ஒரு வன்முறை, பயங்கரவாதம் என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கு சிவநாயகம் சொல்கின்ற மறுமொழி தான் இந்தக் கடிதம். இதை எழுதும் போது நாடு கடந்து பிரான்சில் இருந்தார்.

‘அமெரிக்காவை வெள்ளையர்கள் கண்டு பிடிக்க முன்னரே எனது நாட்டில் என்னுடைய மூதாதையர்கள் இருந்திருக்கிறார்கள். நான் மட்டும் 53 வருடம் இருந்திருக்கிறேன். நீங்கள் 6 மாதம் சிறிலங்காவில் இருந்துவிட்டு கதைக்கிறீர்கள். நான் இப்போது இருப்பதற்கு இடம் தேடி உலகம் முழுவதும் அலைந்து கொண்டு இருக்கின்றேன். இப்போது பாரிஸில் நிற்கிறேன். நீங்கள் பல நாடுகள் போனதாக சொல்கிறீர்கள். நான் உங்களை விட அதிக நாடு சுற்றி இருக்கிறேன். நான் ஏன் என்னுடைய நாட்டை விட்டு போனேன் என்றால், அந்த நாடு சொந்த நாடு என்று நினைத்துக் கொண்டிருந்தேன், ஆனால் அந்த நாடு என்னை தேடப்பட்டவனாக அறிவித்திருக்கிறது, ஆகையால் நான் போனேன்.’

இப்படி சொன்ன சிவநாயகம், இன்னொன்றையும் சொல்கிறார், ‘நீங்கள் தமிழருக்கு புத்திமதி சொல்லும் போது என்ன செய்வது என்று எனக்கு தெரியவில்லை. ஒரு தமிழன் 10 பேர் இருந்தால் அந்த 10 பேரை கண்காணிக்க ஒரு சிங்கள இராணுவச் சிப்பாய் இருப்பான். 45 வருடங்களாக அரச பயங்கரவாதத்திற்கு முகம் கொடுத்து வந்திருக்கிறார்கள் எங்களுடைய மக்கள். நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் படையினரை தங்களது முகாம்களுக்குள் இருக்க சொல்லுங்கள். நேர்மையாக சிந்தியுங்கள். இந்த பயங்கரவாதம் பற்றி கதைத்து அதற்கு ஒரு மூடி போட்டு முலாம் இட்டு பேசாதீர்கள்.’ என்று சிவநாயகம் எழுதி இருக்கிறார். இது மிகப் பெறுமதியான புத்திமதி.

எங்களுடைய அறிவு மூலங்கள் செல்வங்கள் எல்லாவற்றையும் முற்றுமுழுதாக அழிக்க வேண்டும் என்ற ஒரு சிந்தனை இந்த எரியூட்டலிற்கு பின்னால் இருக்கிறது. இலங்கை இலக்கியத்தை, தமிழ் இலக்கியத்தை, நவீன இலக்கியத்தை பார்த்தீர்களானால் 81 ஆம் ஆண்டு ஒரு பிரிகோடு இருப்பதை நீங்கள் காணலாம்.

பொது நூலகம் புனரமைப்பிற்கு பலர் உதவி இருக்கிறார்கள். பல பெரியோர்களினுடைய நூல்கள் அப்படியே தாராளமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே கோப்பாய் வன்னிய சிங்கத்தினுடைய நூல், வவுனியா பண்டிதர் இராசையனாரினுடைய நூல், முதலியார் குலசபாநாதனுடைய நூல் என்று நூல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அப்பால் முதலமைச்சராக இருந்த எம்.ஜீ.ஆர் 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான புத்தகங்களை கொடுத்தார். முத்தையா 2000 நூல்களை கொடுத்தார்.

நூலகத்தை மீண்டும் உருவாக்குவதில் இருந்த இன்னுமொரு யதார்த்தமான பிரச்சனையை ஆணையாளர் சொன்னார். எல்லோரும் நூல்கள் தந்தார்கள். நூல்கள் தேங்கிப்போய் நூலகம் எல்லாவற்றையும் வைத்திருக்க இயலாது என்ற நிலை வந்தது. சேமித்து வைத்திருப்பது ஒரு பிரச்சனை. தேவையில்லாத நூல்களை இரத்து (rejected) என்று சொல்லி ஒரு குவியல் இருந்தது. அப்படிப்பட்ட குவியலில் இருந்தும் அருமையான நூல்களை நான் தேடி எடுத்து இருக்கிறேன்.

அப்பொழுது பலரும் உதவி செய்தார்கள். மத்திய கல்லூரியில் மாணிக்கவாசகன் என்ற நூலக பொறுப்பாளர் ஒருவர் இருந்தார். தொழில்நுட்ப கல்லூரியில் தயாநாதன் என்று ஒருவர் இருந்தார். நான் ஒரு நூலக பொறுப்பாளருக்கு இலக்கணமாக பார்ப்பது அவரை தான். படிப்பவர்களுக்கு ஆய்வாளர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருப்பவர். அதேபோல யாழ் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண கல்லூரியில் இருந்து மாறி இங்கு இயங்க தொடங்கும் போது ஆர் எஸ் தம்பையா என்று ஒருவர் இருந்தார். நூலகம் வெறுமனே காட்சிக்காக வைத்திருக்கிற

இடம் இல்லை. அதற்கு மேலே வாசகர்களுக்கு வழிகாட்ட கூடியது.

சிலவேளைகளில் கவலையாக இருக்கும். பல்கலைக்கழக நூலகங்களில் தொடுவார் இல்லாமல் நிறைய புத்தகங்கள் இருக்கின்றன. நோபல் பரிசு எடுத்தவர்கள் நோபல் பரிசுக்கு வழங்கிய ஏற்புரை எல்லாம் அடங்கப்பட்ட ஒரு நூல் அங்கு இருந்தது. அதை எடுத்து நான் வாசித்தேன். 'இந்த புத்தகத்தை வாசிக்க எடுத்த முதல் நபர் நான் தான்.' என்று அந்த நூலகர் சொன்னார். இது விமர்சனம் இல்லை. அவசர யுகத்தில் புத்தகம் வாசிக்க நேரம் இல்லாமல் போகின்றது. இந்த தலைமுறை அறிந்திருக்க வேண்டும் ஒருகாலத்தில் பேப்பர் வராமல் கோப்பு அட்டைகளில் (file cover) பத்திரிகை அடித்தோம். நாங்கள் பாரதி சொன்னாரே "வீழ்வேனென்று நினைத்தாயோ" என்பதை செய்து காட்டிய ஒரு சமூகம். வீழ மாட்டோம் என்று நிமிர்ந்து காட்டிய ஒரு சமூகம். இந்த சமூகத்தின் முக்கியமான சொத்து படிப்பு கல்வி அறிவு வாசிப்பு தான். அதை நாங்கள் காக்க வேண்டும். இப்படியான பணியில் ஈடுபட்டு இருக்கின்ற செல்வராஜா அவர்களுக்கு மீண்டும் எம்முடைய இனத்திற்கு இவ்வாறான பங்களிப்பை செய்ய வேண்டும் என்று வாழ்த்தி என்னுடைய பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவிக்கிறேன்.

---

(03ஆம் பக்க தொடர்ச்சி)

இப்பண்ணையில் வேலை செய்யும் ரஜனிகாந், தனது சொந்த இடம் குச்சவெளி எனவும் திருமணம் முடித்து சல்லியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். ஆரம்பத்தில் கடற்தொழிலை செய்து வந்ததாகவும் அதில் போதியளவு வருமானம் கிடைக்காததால் இந்த பண்ணைத் தொழிலை செய்து வருவதாகவும் குறிப்பிட்டார். கடற்றொழில் இல்லாமல் இருந்த சந்தர்ப்பத்தில் ஒருவர் ஒரு பண்ணை ஆரம்பிக்க போகின்றேன், அங்கு வேலை செய்ய முடியுமா என்று கேட்ட பொழுது நானும் சம்மதித்து இந்த வேலையை செய்து வருவதாக ரஜனிகாந் தெரிவித்தார். இப்பண்ணையை பராமரிப்பதற்காக தற்சமயம் 2 பேர் வேலை செய்வதாகவும் இன்னும் ஒரு சில வேலையாட்கள் எடுப்பதற்கும் எண்ணி இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் கூறியனவற்றை இங்கே தருகிறோம்.

**எவ்வாறு இப்பண்ணையை மக்கள் மத்தியில் விளம்பரப்படுத்துகிறீர்கள்?**

Amma Farm என்ற முகப்புத்தகம் மூலமாக விளம்பரப்படுத்துவோம். விளம்பரம் மூலமாக காடை முட்டை, கோழிக்குஞ்சுகள், ஆடு என்பன இருக்கின்றன என்பதை அறிவிப்போம். அப்பொழுது மக்கள் வந்து அதனை வாங்கிச் செல்வார்கள்.

**இப்பண்ணை ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரை பண்ணையின் செயற்பாடு எவ்வாறு இருக்கின்றது?**

கஷ்டப்பட்ட, வாழ்வாதாரம் இழந்தவர்களுக்கு கோழிக்குஞ்சுகள் இலவசமாக கொடுக்கின்றோம். கடந்த ஒரு மாதத்திற்குள் ஆயிரம் கோழிக்குஞ்சுகள் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் இருபத்தைந்து, முப்பது குஞ்சுகள் என வழங்கினோம். அதை வைத்து அவர்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்ற உதவியாக இருக்கும்.

**இவ் வேலைகளை செய்து முடிக்க எவ்வளவு காலம் எடுத்தது?**

பண்ணையில் மதில் ஏற்கனவே கட்டப்பட்டு இருந்தது. அதன் பிற்பாடு இப்பண்ணையை அமைக்க 4 மாதங்கள் பிடித்தது. முதலில் கோழிக்குஞ்சுகள் வாங்கித்தான் வளர்த்தோம். ஆனால் இப்போது முட்டைகளை அடை வைத்து குஞ்சுகளை பெருக்குகிறோம்.

**எதிர்கால திட்டம் அல்லது வேலைவாய்ப்புகள் பற்றி கூற முடியுமா?**

தற்சமயம் வேலை செய்பவர்களுக்கான போதிய சம்பளம் கிடைக்கிறது. எம்மிடம் தற்போது இரண்டாயிரம் புரொய்லர் கோழிக்குஞ்சுகள், ஐம்பது ஆடுகள் என்பன உள்ளன. அவற்றை எதிர்வரும் காலங்களில் பெருக்குவதற்கான திட்டம் உள்ளது. அத்துடன் இன்னும் சரியான வகையில் பண்ணையின் கட்டுமான வேலைகள் முடியவில்லை. இன்னும் ஐந்து பேர் வேலைக்கு தேவை. கட்டுமான வேலைகள் முழுமையாக முடிந்த பின் குடும்பமாகவோ அல்லது தனி ஆளாகவோ பண்ணையில் தங்குமிட வசதி மற்றும் உணவு வசதிகள் என்பவனவற்றுடன் தங்கி நின்று வேலை பார்க்கக் கூடிய வகை

யில் திட்டம் வகுத்திருக்கிறோம். மேலும் இப்பண்ணை இனிவரும் காலங்களில் மேலும் பணியாட்களை இணைத்து வியாபாரம் மற்றும் பொதுநலத்துடன் இன்னும் பல காலங்கள் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான ஒரு களமாகவும் அமைய வேண்டும். என்று கூறி முடித்தார் ரஜனிகாந்.

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனித னின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிக முக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரதம் மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக் கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில் முக்கியமாக முட்டை, இறைச்சியை உற்பத்தி செய்யும் உள்ளூர் உற்பத்தியாளர்கள பல சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

இலங்கை சந்தைகளில் உள்ளூர் முட்டை ஒன்று 50 - 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள், ஆரம்பத் தில் கேக் மற்றும் பிஸ்கட் தொழிலில் மட்டுமே பயன்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனாலும், பின்னர் இந்த முட்டைகள் நுகர்வோருக்கும் கிடைத்தது. இந்தியாவில் இருந்து முட்டை களை இறக்குமதி செய்வது உள்ளூர் முட் டைகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய் வதற்கும், உள்ளூர் முட்டைகள் அதிக விலைக்கு விற்கப்படும் நேரத்தில் நுகர்வோரு க்கு மலிவு விலையில் முட்டைகளை வழங் குவதையும் நோக்கமாக கொண்டிருந்தது.

இந்த நடவடிக்கை நுகர்வோருக்கு சாதக மான ஒன்றாக காணப்பட்டாலும், சிறிலங்கா அரசாங்கம் கடந்த காலங்களில் இறக்குமதிக ளில் செய்த ஊழல்களை பார்க்கும் பொழுது இந்த முடிவும் நேர்மையான முறையில் எட்டப் பட்டதா என்ற சந்தேகம் இருக்கின்றது. தற் போதைய பொருளாதார சூழ்நிலையில் ஒரு முட்டை உற்பத்திக்கான செலவு சுமார் 35 - 45 ரூபாயாக உள்ளது, மேலும் போக்குவரத்து செலவுகளை சேர்க்கும் போது ஒரு முட்டை யின் மொத்த விலை சுமார் 45 - 55 ரூபா யாக உள்ளது. எவ்வாறாயினும், முட்டை உற்பத்திக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துகளுக்கு மாதாந்தம் 20 மில்லியன் ரூபாவை அரசாங்கத்திற்கு வரியாக செலுத்த வேண்டியிருப்பதால் உற்பத்தியாளர்கள் அதிக விலையை கோருகின்றனர். உள்ளூர் தீவன விலையை குறைத்து வரி தொடர்பிலும் அர சாங்கம் நிவாரணம் வழங்கினால், உள்ளூர் முட்டைகளை 25 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என உள்ளூர் முட்டை உற்பத்தி யாளர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

---

(18ஆம் பக்க தொடர்ச்சி)

இன்றைக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் நடக்கின்ற இந்த குடியேற்ற பிரச்சனைகளுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த அரசியல் சக்திகள் தாங்களாகவே முன்னுக்கு போய் போராடுகிறார்கள். ஒரு கொஞ்ச பேர் தான் தாங்களாகவே போராடி அதை தடுக்கிறார்கள். கூடியவரை தடுத்து வைத்திருக்கிறார்கள். அதே நிலைமையை ஏன் கிழக்கில் செய்ய முடி யாது? கிழக்கிலே அவர்கள் அதே மாதிரி யான செயற்பாட்டை முன்னெடுத்து இருந்தால் திருகோணமலையிலே அவ்வளவு குடியேற்றங்க ளையும் தடுத்திருக்கலாம். இன்றைக்கு முல் லைத்தீவு மாவட்டத்தில் ரவிகரனும் அவரை சேர்ந்த சிறு குழுவினரும் செயற்படுகின்ற மாதிரி அன்றைக்கு திருகோணமலை மாவட்டத்தில் செயற்பட்டிருந்தால் திருகோணமலை மாவட்டத் தில் குடியேற்றங்களை ஓரளவுக்கு தடுத்திருக் கலாம். பெருந்தேசியவாதம் தொடர்ச்சியாக தன் னுடைய ஆக்கிரமிப்புக்களை செய்து கொண்டு தான் இருக்கும். அந்த ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக நாங்கள் போராடவில்லை என்றால் அவர்கள் முழுமையான ஆக்கிரமிப்புக்களை செய்வதற்கு நாங்களே வழிவிடுகின்றது மாதிரி யான ஒரு சூழலைத் தான் அது உருவாக்கும். ஆகவே நெருக்கடிகளை காரணம் காட்டி எமது உரிமைகளை விட்டு கொடுப்பதை விடுத்து என்ன வகையான நெருக்கடிகள் வந்தாலும் அதற்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றி சிந்தித்து முன்னேறுவது தான் கூடுதலாக பொருத்தமாக இருக்கும்.

# கிராமங்களை அவற்றுக்குரிய கிராமியப் பண்புகளோடு பேணினால் மட்டுமே

# எல்லோருக்கும் வாழ்வுண்டு



பேராசிரியர் ந.சிறிஸ்கந்தராசா

இனிவருகின்ற இன்னொரு தொல்லை குழாய் கிணறு. ஆழ்துளைக் கிணறு என்று சொல்கிறார்கள். ஆழ்துளைக் கிணறு எவ்வளவு ஆழமாகப் போகிறது என்று விசாரித்தால் வன்னி பிரதேசத்திலோ அல்லது வட இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலோ இருப்பது போல 200, 300 அடிவரை துளைக்கிறார்கள். பூமியின் இதயத்தில் துளை போட்டு தண்ணீர் எடுக்கும் போது அங்கே அமுத சுரபி போல நீரை வழங்க கூடிய பெரிய ஒரு சமுத்திரம் இருக்கிறது என்று முட்டாள்தனமாக நம்புகிறார்கள். கற்பாறைகளுக்கு இடையே ஒளிந்து கிடக்கின்ற கடைசி துளியையும் இறைத்து விட்டு பஞ்சாப்பில் விவசாயம் செய்ய முடியாமல் கைவிரித்து நிற்கிறார்கள்.

இங்கே அவ்வளவு தூரம் போக தேவை யில்லை. 20 அடி குழாய் கிணறு அடிக்க முடியுமாக இருந்தால் 25 அடி துளைத்தால் உங்களுக்கு வருடம் முழுக்க தாராளமாக நீர் வரும் என்று துளைப்பவர் சொல்லுவார். அப்பொழுது துளைக்க விடுபவர் ஒன்றும் சொல் லாமல் தலையசைத்து விட்டு அவருக்கு அந்த மேலதிகமான கட்டணத்தை கொடுத்து விடு வார். அங்கே நீர் தன்னுடைய பாதுகாப்பான எல்லையை கடந்து உவர் நீரை அண்டிய ஆழத்திற்கு செல்லும். அப்போது அயலில் உள்ள அவ்வளவு பேரினுடைய நீர் வளமும் ஒரு பாதுகாப்பற்ற நிலையை சென்றடைகிறது. காலநிலை மாற்றத்தின் காரணமாக அடுத்தடுத்த வருடம் என்ன வகையான மழை பெய்யும்? அது என்ன வேகத்தில் பெய்யும்? முந்தி வருமா? பிந்தி வருமா? இந்த விடயங்கள் எதிலும் தெளிவில்லாத அளவிற்கு எங்களால் காலநிலையைப் பற்றி எதிர்வு கூற முடியாது. வராது, வருவது குறைவாக இருக்கும் என்ற கருத்து நிலையிலிருந்து எங்களுடைய திட்டமி டலையும் வாழ்க்கையையும் அமைத்தோமானால் எமக்கு நல்லது.

கிராமப்புற பகுதிகளையாவது கிராமப் புறங்களாக இருக்க விடுவோமாக இருந்தால் எமக்கு உய்வு உண்டு. இது நாங்கள் சிந்திக்க வேண்டிய விடயம். குழாய் கிணறுகள் இந்த தேசத்தினுடைய விதிகளுக்கு அமைய, உள் நாட்டு அதிகார சபைகளின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய, உரிய உத்தரவோடு, உரியவர்களால் கணிப்புக்கள் சரி பார்க்கப்பட்ட பின்னர் மட்டுமே கிணறு துளைக்கப்படுவதை அனுமதிக்க வேண்டும். அப்படியிருந்தும் கூட அந்த அனுமதி பிரகாரம் அது நடப்பதில்லை. இரவோடு இரவாக கூட சில இடங்களில் கிணறு கள் துளைக்கப்படுகின்றன. ஏன், கடைகளுக்கு உள்ளேயே குழாய்கள் துளைக்கப்பட்டு இருக் கின்றன என்ற செய்தி பல ஆண்டுகளுக்கு முதல் எங்களை வந்தடைந்த போது நாங்கள் மிகவும் வியப்படைந்தோம். ஏமாற்றமடைந்தோம். ஏனெ ன்றால் கல்வியில் மேம்பட்டு, பாரம்பரியத்தை கட்டிக்காத்து, இயற்கையோடு இசைபட வாழ் ந்த இந்த தமிழ் சமூகம் தன்னுடைய பாரம்பரி யத்தை மூடி ஒதுக்கி வைத்துவிட்டு முன்னேற் றம், அபிவிருத்தி என்ற பெயரில் வீர நடை போட்டு அழிவை நோக்கி செல்கின்றது.

என்னுடைய கருத்தில் ஏதோ ஒரு வகையான கோபம் தெரிகிறது என்றால் அது உண்மையான கோபம் தான். ஏனென்றால் 45,50 ஆண்டுகள் இங்கேயும் அங்கேயுமாக பல சூழலில், பல நாடுகளில், பல பின்னணிகளில் நடைபெறுவனவற்றை பார்த்தவன் நான். என்னு டைய இறுதி ஆய்வுப் பணியையும் என்னுடைய கல்வித் துறையையும் இயற்கை வளங்களை பேணுவதற்காக ஒதுக்கி சிந்தித்து அதை அறி ஞர்களோடு உரையாடி விவாதித்து வளர்த்து கொண்டிருக்கின்ற ஒருவன். இந்த மண்ணில் உலாவிக் கொண்டிருக்கும் போது நான் பார்ப் பவற்றிலிருந்து வந்த ஏமாற்றத்தின் வெளிப்பாடு அது.

இந்த உலக சூழல் தினத்திலே 30 ஆண்டு களாக உலகம் முழுவதும் ஆண்டுதோறும் இது பேசப்பட்டு வந்தாலும் இந்த வருடம் உலக மட்டத்தில் நீருக்காக பெரும் மாநாடு வைத்து உலகம் நினைவு கூர்ந்தது. இன்றைக்கு நேற் றல்ல, மற்ற துறைகளில் உள்ளது போல இல் லாமல் நீர் துறைக்கு ஐக்கிய நாடுகள் சபை பொறுப்பெடுத்து ஏறத்தாழ 44 ஆண்டுகளுக்குப் பிறகு, முழு உலகமும் நீரை ஒட்டிய விடயத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கின்ற நிலை யில் இந்த ஆண்டு 3 நாட்களாக அந்த மாநாடு நடைபெற்று இருக்கிறது. அங்கே அடிப் படையான நீரை பாதுகாப்பதற்கான முயற்சிக ளுக்காக முக்கியமான வசதி படைத்த நாடுகள் எல்லாவற்றிடமும் தங்களுடைய நிதியில் எவ்வ ளவு தரப் போகிறீர்கள் என்று கேட்கப்பட்டது. அவர்களின் உறுதி மொழியின் அடிப்படையில் 17 சர்வதேச நிறுவனங்களும் நாடுகளும் சேர்ந்து 11 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கி இருக்கிறார்கள். இது ஒன்றும் பெரிய தொகை இல்லையென்றாலும் இது உலக பொரு ளாதார மட்டத்தில் நீருக்காக சிந்தித்து அதற் கான திட்டங்களை வகுப்பதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது. எமது நாட்டிற்கு அந்த திட்டங்கள் தேவையில்லை. நாங்கள் எங்களுக்கு தெரிந்த அறிவை பயன்படுத்தி அன்றாட வாழ்க்கைக்கு உகந்த வகையில் தேவைகளை அளவாக செய்தோமானால் சிறப்பாக இருக்கும்.

நீர் பற்றாக்குறை ஏன் இப்போது புதி தாக தோன்றி இருக்கிறது? உலக சனத் தொகை அவ்வளவு வேகமாக கூடி தேவை அதி

> கிராமப்புறங்கள் நகரமாகினால் எல்லோருக்கும் வசதிகள் இருக்கும், வாய்ப்புகள் இருக்கும், அரசினுடைய சேவைகள் எம்மை குழாய் வழியாக வந்து சேரும் என்ற துணிவோடு போவோமாக இருந்தால் குழாய் தருபவர் குழாயை பூட்டினால் என்ன செய்யப் போகின்றோம்?

கரித்திருக்காதா என்று கேட்கிறார்கள். அது ஒரு பக்கம், அதைவிட இரண்டாவது காரணமாக இருப்பது புவி வெப்பமடைதல். காலநிலை மாற்றத்தோடு தொடர்பானது. அதற்கு நாங்கள் காரணமாக இல்லாவிட்டாலும் எங்களுடைய சகோதரர்களாக வசதியான நாடுகளில் மற்றும் மேற்குலகத்தில் வாழ்கின்றவர்களின் வாழ்க்கை முறையின் பிறழ்வுகளால் பூமி வெப்பமடைந்து வருகிறது. அது 1.5 பாகை சராசரியை விட மேலதிகமாக வரும் நிலையில் நாங்கள் தாங்க முடியாத வெப்பத்தை இங்கே அனுபவிக்க இருக்கிறோம். மழை வீழ்ந்தாலும் கூட அது ஆவியாகி போய் விடும். பாதுகாத்து அதை மண்ணுக்கு செலுத்துவதற்கு தேவையான கால அவகாசத்தில் மழை பெய்யாது. ஐந்து நாட்கள் மெதுமெதுவாக பெய்து மண்ணை நிரப்ப வேண்டிய மழை சிலவேளைகளில் அரை நாளில் பெய்தால் எந்த மண்ணும் அதை உறிஞ்சாது. 90% கடலுக்குத் தான் போய் சேரும்.

இந்த நிலையற்ற ஓர் எதிர்காலத்தில் இனி நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? மேலும் நாங்கள் நகர மயமாதல் ஊடாக சென்று கொண்டிருக்கிறோம். நகரமயமாதலை வேண்டாம் என்று சொல்ல முடியாது. ஆனால் கிராமப்புறங்கள் நகரமாகினால் எல்லோருக்கும் வசதிகள் இருக்கும், வாய்ப்புகள் இருக்கும், அரசினுடைய சேவைகள் எம்மை குழாய் வழியாக வந்து சேரும் என்ற துணிவோடு போவோமாக இருந்தால் குழாய் தருபவர் குழாயை பூட்டினால் என்ன செய்யப் போகின்றோம்? குழாயை பூட்டுவதற்கு எந்தவிதமான முரண்பாடுகளோ யுத்தங்களோ சண்டைகளோ தேவையில்லை. எரிபொருள் இல்லாவிட்டாலே குழாய் பூட்டப்படும். அதனை நாம் நேரடியாகவே கண்டுவிட்டோம். எனவே, தன்னிறைவான தன் காலில் நிற்க கூடிய துணிவுள்ள சமூகம், அதை வாழ்ந்து காட்டிய சமூகம், உலகத்திற்கு முன்னுதாரணமாக இருக்கின்ற சமூகம் இந்த விடயத்தில் அளவோடு பொறுமை காத்து வீணடிக்காமல் சிக்கனமாக வாழுமாக இருந்தால் நாம் இதனை வெற்றி கொள்ளலாம்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு கிணறு இருக்கிறது, இது நவீனத்துவம். ஒன்பது வீட்டிற்கு ஒரு கிணறு இருப்பது புராதனம். புராதனமும் தேவையில்லை, நவீனத்துவத்தின் அளவுக்கதிகமான உறிஞ்சல் செலவழித்தலும் தேவையில்லை. இரண்டிற்கும் இடையே ஒரு சமநிலை வர வேண்டும். அதை எம்மால் செய்ய முடியும். உரியவர்கள், அறிஞர்கள், பல்கலைக்கழகங்கள், ஆய்வாளர்கள், எங்களுடைய இளம் தலைமுறையினரை அந்த வழிக்கு நெறிப்படுத்த வேண்டும். எனவே தான் இந்த முயற்சியில் நாங்கள் சென்ற மூன்று ஆண்டுகளாக இளையோரை உள் எடுத்து, பல்கலைக்கழக மூத்தவர்களை பல்துறை சார்ந்தோரை ஒன்றிணைத்து வட மாகாணத்தின் நீர் பாதுகாப்பு என்பதற்கான ஒரு செயல்திட்டத்தை நிகழ்த்தி வருகிறோம். மூன்று ஆண்டை நிறைவு செய்து இப்போது அதைப்பற்றி பல மட்டங்களில் பேசி வருகிறோம்.

இவை எல்லாம் நீர் பற்றாக்குறை என்ற அச்சுறுத்தலுக்கு நாம் எம்மை தயார்படுத்தி கொள்வதற்கான முனைப்புக்கள். எங்கள் வீடுகளில் நான் சொன்ன விடயங்களை கவனமாக பின்பற்றி கொண்டு எங்களுடைய வீட்டில் இன்று குழந்தைகளாக இருப்பவர்களுக்கு பழங்கதைகள் சிலவற்றை சொல்லி இப்படித்தான் என்னுடைய பேரன் பேத்தி காலத்தில் இந்த கிராமம் இருந்தது என்று சொன்னீர்கள் என்றால் அங்கே பல அவசியமான உலகத்திற்கு முக்கியமான செய்திகள் தாமாக வெளிவரும்.

# ஆயுதப் போராட்டத்தினுடைய நியாயத்தன்மைகளை நிரூபித்துள்ள திருகோணமலை இனவெறித் தாக்குதல்



சி.அ யோதிலிங்கம்

**தி**லீபனுடைய நினைவு தூபி கப்பல்துறையில் வைத்து தாக்கப்பட்டிருக்கின்றது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்றும் பார்க்காமல் செல்வராசா கஜேந்திரனும் தாக் கப்பட்டிருக்கின்றார். இது படுமோசமான மிலேச்சத்தனமான இனவெறியினுடைய வெளிப்பாடு என்று தான் நாங்கள் கூற வேண்டும். பெருந்தேசியவாதத்தினுடைய உண்மை நிலையை சர்வதேசம் பார்ப்பதற்குரிய ஒரு வாய்ப்பை இந்த தாக்குதல் ஏற்படுத்தி இருக்கின்றது. ஆயுதப் போராட்டத்தினுடைய நியாய தன்மைகள் எல்லா வற்றையும் இது நிரூபிக்கிறது என்பது தான் என்னுடைய கருத்து.

அகிம்சை ரீதியாக போராடிய ஒருவருடைய நினைவு ஊர்தியைக் கூட சகித்துக் கொள்ள முடியாதவர்கள் நாளைக்கு தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளுக்கு ஒத்துழைப்பு கொடுப்பார்கள் என்று நாங்கள் எவ் வாறு எதிர்பார்க்க முடியும்? என்ற கேள்வியையும் இது எழுப்பி இருக்கிறது. இதிலே அவமானப்படுத்தப்பட்டது திலீபனோ, கஜேந்திரனோ அல்ல. தமிழ் தேசியம் தான் இங்கே அவமானப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் தேசியத்தை பின் பற்றுகின்ற தமிழ் மக்கள் அவமானப்படுத்தபட்டிருக்கிறார்கள். எந்தவித கட்சி வேறுபாடுகள் குழு வேறுபாடுகள் எல்லாவற்றையும் கடந்து இந்த விவகார த்தை சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தினை சேர்ந்தவர்களாகிய நாங்கள் இதற்கான கடுமையான கண்டனத்தை தெரிவித்து கொள்கின்றோம். அடுத் தது இவ்வாறான ஒரு போராட்டத்தை நடாத்துகின்ற போது ஒரு அரசியல் கட்சி தனித்து நடத்துவது உண்மையில் பொருத்தமானது அல்ல. பல்வேறு கட்சிகளையும் பொது அமைப்புகளையும் இணைத்து ஒரு பேரெழுச்சியாக நடாத்துகின்ற போது தான் இவ்வாறான அனர்த்தங்கள் எல்லாவற்றையும் தவிர்க்க கூடியதாக இருக்கும். வெளியிலே ஒரு வலுவான செய்தியை சொல்ல கூடியதாக இருக்கும். தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதிலே தவ நிழைத்து இருக்கிறது என்றே கூற வேண்டும்.




"கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழ் மக்கள் எழுச்சி அடைய வேண்டும். எழுச்சி அடைந்து அவர்கள் இதற்கு எதிராக குரல் கொடுக்க முன்வருகின்ற போது தான் உண்மையிலே அவர்கள் பலமாக இருக்க முடியும்."

அவர்கள் மக்கள் அமைப்புக்களோடு ஒழுங்கான உரையாடலை பேணி அவர்களையும் வலுவாக இணைத்து கொள்ளவில்லை. ஏனைய அரசியல் கட்சிகளோடு கட்சி முரண்பாடு இருந்தாலும் கூட இந்த திலீபன் நினைவு தினத்தை மையமாக வைத்து அவர்களோடும் ஒரு உரையாடலை நடாத்தி பொத்துவில் முதல் பொலிகண்டி வரை பேரெழுச்சி நடைபெற்றது போல ஒரு பேரெழுச்சியாக இதனை செய்திருக்கலாம். இன்றைக்கு தேவையானது அடையாள போராட்டங்கள் அல்ல, மாறாக பேரெழுச்சிகள் தான். ஆகவே அந்த பேரெழுச்சியாக திலீபனுடைய நினைவு தினத்தை எதிர்காலத்தில் அனுஸ்டிப்பதற்கான செயற்பாடுகளை இப்போதே ஆரம்பிப்பது நல்லது.

நினைவு கூருதல் என்பது வரலாற்றை புதிய தலைமுறைக்கு கடத்துகின்ற ஒரு செயற்பாடு. அரசியலை விழிப்புற வைத்திருக்கின்ற ஒரு செயற்பாடு. உண்மைகளை வெளியில் கொண்டு வருவதற்கான ஒரு செயற்பாடு. ஆகவே இது மிகவும் முக்கியமாக நடாத்தப்பட வேண்டிய ஒன்று. ஏனையவர்கள் அதிலே கவனம் செலுத்தாமல் இருக்கின்ற போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதில் அக்கறை செலுத்தியமையை இட்டு நாங்கள் அவர்களை பாராட்ட வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற இந்த சூழலில் தமிழ்த் தேசிய அபிலாசைகளை பிரதிபலிக்க கூடிய வகையில் உடனடியாக களத்தில் நின்று செயற்படுகின்ற அமைப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான் இருக்கின்றது. ஏனையவர்கள் இது பற்றிய அக்கறை இல்லாமல் இருக்கின்றமை மிகவும் கவலைக்குரிய ஒன்று. தலைவர்கள் முன்னே மக்கள் பின்னே என்று சொன்னார்கள். இப்போது தலைவர்கள் பின்னே வருவதற்கு கூட தயங்குகின்ற அல்லது வராமலிருக்கின்ற ஒரு நிலைமை தான் காணப்படுகின்றது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

தேசிய இனப் பிரச்சனை என்பது புறத்தே இருந்து வருகின்ற ஒடுக்குமுறை. அந்த தேசிய இனத்திலே இருக்கின்ற சகல தரப்புகளும் அதற்கு முகம் கொடுக்கின்ற போது தான் அந்த விவகாரத்தை வினைத்திறனுடன் கொண்டு செல்ல கூடியதாக இருக்கும். எதிர்காலத்திலாவது ஒருங்கிணைந்த செயற்பாட்டை நோக்கி நகர்வதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்று நான் வினயமாக கேட்டு கொள்கின்றேன். 'தியாக தீபத்தினுடைய நினைவு ஊர்தியை கிழக்கு மாகாணத்துக்குள்ளால் கொண்டு வரும் போது கிழக்கு தமிழ் மக்களின் பாதுகாப்பு கேள்வி குறியாகும் நிலை உள்ளது. கிழக்கு தமிழ் மக்களின் பாதுகாப்போடு விளையாடக் கூடாது.' என சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். நினைவு ஊர்தியின் பவனி கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தல் என்று நினைப்பது ஒரு கோழைத்தனமான இயலாமையினுடைய வெளிப்பாடு.

நினைவு கூரல் நடத்துவது என்பது தமிழ் மக்களுக்கு இருக்கின்ற ஒரு அடிப்படை உரிமை. அந்த அடிப்படை உரிமைகளை மீறுகின்ற போது அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியது அனைவருடைய கடமை. கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பாதுகாப்பில் விளையாடுகிறார்கள் என்றால் இன்றைக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பாதுகாப்பாகவா இருக்கிறார்கள்? அவர்கள் பாதுகாப்பற்று தான் இருக்கிறார்கள். ஆகவே இவ்வாறான போராட்டங்களின் ஊடாக அவர்களுக்குரிய பாதுகாப்பை எப்படி கட்டியெழுப்ப வேண்டும் என்பது பற்றி தான் நாங்கள் கூடுதலாக யோசிப்பது நல்லது. இதற்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழ் மக்கள் எழுச்சி அடைய வேண்டும். எழுச்சி அடைந்து அவர்கள் இதற்கு எதிராக குரல் கொடுக்க முன்வருகின்ற போது தான் உண்மையிலே அவர்கள் பலமாக இருக்க முடியும்.

(13ஆம் பக்கம் பார்க்கவும்)

(24ஆம் பக்க தொடர்ச்சி)

அதாவது தொன்மை (antiquity) என்ற வார்த்தைக்குள் இரண்டு விடயங்களை சேர்க்கின்றார்கள். ஒன்று தொன்மையான கட்டிடம் (ancient monuments) மற்றையது தொன்மையான பொருட்கள்.

தொன்மையான கட்டிடம் என்று சொல்லப்படுவதற்கு வரைவிலக்கணம் 1815 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னரான கட்டிடங்கள் தொன்மையான கட்டிடங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது இந்த தீவின் கட்டுப்பாடு முழுமையாக ஆங்கிலேயரினுடைய ஆட்சிக்கு வந்த நாளிற்கு முற்பட்ட காலப்பகுதியினை, அந்த காலப்பகுதிக்கு உரிய கட்டிடங்களை இதனுள் வைத்து நோக்க வேண்டும் என்பது தான் இந்த தொல்லியல் சட்டத்தினுடைய ஏற்பாடாக இருக்கிறது.

இந்த தொல்லியல் சட்டத்தினுடைய பிரிவு 2 இன் பிரகாரம் ஏதேனும் காணியில், அது தனியார் காணியாக இருக்கலாம், ஏதாவது தொன்மையான பொருள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அது மேல் சொல்லப்பட்ட வரைவிலக்கணத்திற்கு உட்படும் பட்சத்தில் அந்த பொருள் மீது நீங்கள் உரிமை கோர முடியாது. அந்த தொல்பொருள் அரசுக்கு சொந்தமானது. வேண்டுமென்றால், அந்த பொருளை அது எந்த தனி நபரினுடைய காணிக்குள் இருந்து பெறப்பட்டதோ அவரிடம் அதற்குரிய சந்தை விலையை கொடுத்து அரசாங்கம் வாங்கலாம் என்று சட்டம் ஏற்பாடு செய்கின்றது. ஆனால் அரசாங்கம் அதனை கட்டாயம் செய்ய வேண்டும் என்று சொல்லப்படவில்லை.

இந்த சட்டத்தினுடைய முதலாவது பாகம் இந்த பொருட்களை கண்டுபிடித்தல் பற்றியதாக இருக்க, இரண்டாவது தொல்லியல் ரீதியான அகழாய்வை யார் செய்யலாம் என்பது தொடர்பாக இருக்கின்றது. அதன் பிரகாரம் தொல்லியல் திணைக்களத்தினுடைய பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரம் இன்றி எவரும் தொல்லியல் அகழாய்வு செய்ய முடியாது. பல்கலைக்கழகத்தின் வரலாற்று துறை என்று ஒன்று இருந்தாலும் அங்கு தொல்லியல் வேலை செய்யப்பட்டிருந்தாலும் அவர்கள் கூட தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியை பெறாமல் தொல்லியல் அகழ்விலே ஈடுபட முடியாது. அவ்வாறாக அனுமதிப் பத்திரம் பெறாமல் செய்யப்படுகின்ற அகழாய்வுகள் தண்டனைக்கு உட்படுத்தக் கூடிய குற்றங்கள் என்று சொல்லப்படுகின்றது. இவை தண்டனைக்குரிய குற்றங்களாக 1998 இலும் 2005 இலும் வந்த திருத்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன் பிரகாரம் குறைந்தது 2 வருடங்களும் ஆக கூடியதாக 5 வருடங்களும் தண்டனைக்கு உட்படுத்தப்படலாம். அதிலே குறிப்பாக சொல்லப்படுகின்ற விடயம் என்னவென்றால் வெறுமனே அனுமதியின்றி செய்யப்படுகின்ற அகழாய்வுகள் மாத்திரமல்லாமல் தொல்லியல் சின்னங்களை அல்லது தொல்லியல் பொருட்களை பாதித்தல், அவற்றை அழித்தல், உருமாற்றம் செய்தல் போன்ற விடயங்கள் கூட குற்றத்திற்கு உரிய விடயங்களாக சொல்லப்பட்டுள்ளன.

இதிலே மிக முக்கியமான விடயம் இந்த சட்டத்தினுடைய பிரிவு 15C இன் கீழ் குறித்த குற்றமானது பிணை வழங்கப்பட முடியாத ஒரு குற்றமாக சொல்லப்படுகிறது. அதாவது தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்பட்ட இடத்திற்குள் நீங்கள் நுழைந்து ஒரு வேலையை செய்வீர்களாக இருந்தால் அல்லது அங்கு தொல்லியல் சின்னத்தில் ஏதேனும் மாற்றங்களை ஏற்படுத்தும் விதமாக நீங்கள் செயற்படுவதாக கருதினால் அதற்காக நீங்கள் கைது செய்யப்பட்டால் உங்களுக்கு பிணை வழங்கப்பட முடியாது என 15C ஏற்பாடு சொல்கின்றது. இது ஒரு முக்கியமான விடயம் ஏனென்றால் பிணை வழங்கப்பட முடியாத குற்றங்கள் என்று மிகச் சிறிய அளவிலான குற்றங்கள் தான் வகைப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் அல்லது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துவது போன்ற குற்றங்கள் என்று மிக குறிப்பிட்ட குற்றங்கள் தான் பிணை வழங்கப்பட முடியாத குற்றங்களாக சொல்லப்படுகின்றன. அந்தவகையிலே, இந்த 15C இன் கீழ் தொல்லியல் விடயங்கள் தொடர்பாக இழைக்கப்படுகின்ற குற்றங்களும் பிணை வழங்கப்பட முடியாத குற்றங்களாக இருக்கின்றன என்பது பலரும் அறியாத உண்மை.

அடுத்தது மிக முக்கியமான விடயம், 1815 க்கு முற்பட்ட அதாவது இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்படுத்தப்படுவதற்கு முன்னரான காலப்பகுதிக்கு உரிய அந்த கட்டி

> **இலங்கையில் மாத்திரம் தான் மரங்களை தொல்லியல் சின்னங்களாக சொல்லக் கூடிய ஏற்பாடு இருக்கிறது உங்களுடைய வீட்டிலே வளர்கின்ற மரத்தை கூட தொல்லியல் சின்னமாக அறிவிப்பதற்கு இந்த சட்டத்தின் கீழே அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன**

டங்கள் தான் தொல்பொருள் சின்னங்கள் எனப் படும். ஆனால் பிரிவு 16 இன் பிரகாரம் எல்லை யில்லா அதிகாரம் ஒன்று அமைச்சருக்கு வழங் கப்பட்டுள்ளது. ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலமாக 1815 பங்குனி மாதம் 2 ஆம் திகதி க்கு பிற்பட்ட ஒரு கட்டிடத்தையும் தொன்மை யான கட்டிடம் என அறிவித்து பிரசுரிக்கும் ஏற்பாடுகளை சட்டத்திலே கொண்டு வந்திருக்கி றார்கள்.

குருந்தூர் மலையின் பிரச்சனை பற்றி பேசுவோம். அங்கு இருக்க கூடிய விகாரையை இந்த பிரிவு 16 இன் கீழ் தான் 2013 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி தொல் லியல் திணைக்களத்தை உள்ளடக்கிய தேசிய பாரம்பரிய அமைச்சுக்கு பொறுப்பாக இருந்த (minister for national heritage) கலா நிதி ஜெகத் பாலசூரிய ஒரு வர்த்தமானி அறி வித்தலின் கீழ் ஒரு தொன்மைக்குரிய சாதன மாக அறிவித்திருக்கிறார்.

இதிலே கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல தொல்லியல் சின்னங்களுக்கான வரை விலக்கணம் 1815 இற்கு முற்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால் குருந்தூர் மலையில் இரு க்க கூடிய விகாரையானது மகாவம்ச காலத் திலிருந்து இருக்கின்ற ஒரு விடயம் என்று சொல்லப்பட்டாலும் அமைச்சரால் விடுக்கப்ப ட்ட இந்த அறிவித்தலானது பிரிவு 16 இன் கீழ் செய்யப்பட்ட ஒரு பிரகடனம் என்பதனை கவனிக்க வேண்டும். அது 1815 இற்கு பின்ன ரான ஒரு தொல்லியல் சின்னம் என்று தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குருந்தூர் மலை விகாரை 1815 இற்கு பிற்பட்டது என்பதாகத் தான் பொருள் கோடல் செய்ய வேண்டும்.

இதற்கு பின்னால் உள்ள உண்மையை நாங்கள் விளங்கி கொள்ள வேண்டும். பிரிவு 16 இல் வரலாற்று ரீதியாக, விஞ்ஞான ரீதி யாக உறுதிப்பாடு இல்லாமல் ஒரு குறிப் பிட்டதை தொல்லியல் சின்னம் என்று அறி விப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரங்கள் வழங் கப்பட்டிருக்கிறது. எந்த அளவுகோல்களின் அடிப் படையில் அவை தொல்லியல் சின்னங்களாக அறிவிக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் சட்டம் எதுவும் சொல்லவில்லை. ஆகவே ஒரு அமைச்சர் தான்தோன்றித்தனமாக தற்துணி வின் அடிப்படையிலே ஒரு குறிப்பிட்ட கட்டிட த்தை அல்லது பொருளை அல்லது ஒரு இடத்தை தொல்லியல் சின்னம் என்று அறிவிக் கக் கூடிய ஒரு ஏற்பாட்டை சட்டம் ஏற்படு த்தி கொடுத்திருக்கிறது. அந்த ஏற்பாட்டைப் பாவித்து தான் குருந்தூர் மலையில் இருக்கக் கூடிய விகாரையையும் தொல்லியல் சின்னம் என அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இதனை 15.08.2013 திகதியிட்ட இலக்கம் 1823 : 73 என்ற வர்த்தமானி மூலமாக நாங்கள் அறியக் கூடியதாக இருக்கிறது.

இதில் இன்னொரு வினோதமான பிரிவு இருக்கிறது. அது பிரிவு 16 இற்கு அடுத்ததாக வருகின்ற பிரிவு 17. ஒரு மரத்தை கூட தொன்மையான கட்டிடமாக கருதலாம் என பிரிவு 17 சொல்கிறது. இது எதனை குறிக்கி ன்றது என்பதை உங்களால் ஊகிக்க கூடியதாக இருக்கலாம். ஆனால் இலங்கையில் மாத்தி ரம் தான் மரங்களை தொல்லியல் சின்னங்க ளாக சொல்லக்கூடிய ஏற்பாடு இருக்கிறது. ஒப் பீட்டு தொல்லியல் சட்டங்களை, வேறு நாடு களின் சட்டங்களை படிப்பவர்கள் இதைப் பற்றி எங்களுக்கு சொல்லலாம். உயிர் பல்லி னத் தன்மையை பேணுவதற்காக ஒரு மரத்தை பாதுகாக்க சட்டம் சொல்லலாம். ஆனால் ஒரு மரத்தை தொல்லியல் விடயமாக தொல்லி யல் சார்ந்தது என்று சொல்லுகின்ற ஏற்பாடு இலங்கையில் மாத்திரம் தான் இருக்கின்றது

என்பதனை பிரிவு 17 ஐ படிக்கின்ற போது விள ங்கி கொள்ளலாம். ஆகவே உங்களுடைய வீட் டிலே வளர்கின்ற மரத்தை கூட தொல்லியல் சின்னமாக அறிவிப்பதற்கு இந்த சட்டத்தின் கீழே அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்ததாக, முக்கியமான பிரிவு பாது காக்கப்பட்ட சின்னங்கள் (protected monu ments) பிரிவு. தொன்மையான கட்டிடம் அல் லாத ஒரு கட்டிடத்தை பாதுகாக்க வேண்டு மென்றால் இந்த 18 ஆவது பிரிவின் கீழ் முன்னறிவித்தலை வழங்கலாம். அதற்கு ஆட் சேபனைகளை யாரும் தரலாம் என்று சொல்லி அதற்குரிய சந்தர்ப்பத்தையும் வழங்கிய பின்னர் தான் ஒரு கட்டிடத்தை பாதுகாக்கப்பட்ட சின் னமாக அறிவிக்கலாம். ஆனால் எனது பார்வை யில் 18 இன் கீழ் முன்னறிவித்தல் கொடு த்து ஆட்சேபனை பெறுவதற்கான சந்தர்ப்பம் கொடுத்து அதன் பின்னர் தான் அது பாதுகாக் கப்பட்ட சின்னமாக வர வேண்டும் என்ற தேவை ப்பாட்டை சட்டம் சொல்கின்றபடியால் அதை தவிர்ப்பதற்காக குருந்தூர் மலை போன்றவற்றை கூட பிரிவு 16 இன் கீழ் 1815 இற்கு பிற்பட்ட தொல்லியல் சின்னமாக அறிவிக்கின்றார்கள்.

1815 இற்கு பின்னரான தொல்லியல் சின்னம் என்ற வகைக்குள் வராத கட்டிடங்களை பாதுகாக்கப்பட்ட கட்டிடங்கள் (protected monu ments) என்ற வகைக்குள் அறிவிப்பதாக இருந் தால், பிரிவு 19 இன் பிரகாரம் அதற்குரிய முன்னறிவித்தல் வழங்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்கள் ஆட்சேபனை தெரிவித்தால், அதன் மீது விசாரணை நடாத்தி அதன் பின்னர் தான் அவ்வாறு அறிவிக்கலாம். என்று சொல்லப்படு கின்றது. அது தனியார் ஒருவரின் காணியில் இருந்தால் பிரிவு 20 ஆனது அவர்களுடன் ஒரு எழுத்து மூலமான ஒரு உடன்படிக்கைக்கு செல்ல வேண்டும் என்று சொல்கிறது.

பிரிவு 21 முக்கியமானது. இதன் பிர காரம் எந்தவொரு புராதன கட்டிடத்தின் மீதும் வேலை செய்வதாயின் அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறாக அனு மதி பெறப்படாவிடின் அதற்கும் ஏற்கனவே குறிப்பிட்டது போல குறைந்தது 2 வருடங்களும் ஆகக் கூடியது 5 வருடங்களும் தண்டனை விதிக்கப்படும்.

இதிலிருந்து நாங்கள் அடுத்து தொல்லி யல் காப்பகம் (Archeology Archive) என்ற விட யத்திற்கு வருகின்றோம். அதன் பிரகாரம் அரச காணியை தொல்லியல் காப்பகம் என்ற வகைக் குள் கொண்டு வந்து அதனை அறிவிப்பதற்கான ஏற்பாட்டை செய்திருக்கின்றார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட பிரதேசமானது பாதுகாக்கப்பட்டது என்று சொல்லும் போது ஏக்கர் கணக்கான காணியை பற்றி பேசுகின்றோம். குறிப்பிட்ட பிர தேசமானது ஒரு தொன்மையான தொல்லியல் ரீதியாக முக்கியமான இடம் என்று பிரிவு 33 இன் கீழ் தொல்லியல் திணைக்களத்தின் பணி ப்பாளர் நாயகமானவர் அறிவிக்கலாம். காணி ஆணையாளரின் அனுமதியோடு அல்லது காணி ஆணையாளரின் அனுமதி பெறப்படாதவிடத்து தனது துறைக்குரிய அமைச்சரிடமிருந்து அனு மதியை பெற்று அந்த இடத்தை தொல்லியல் காப்பகமாக அவர் அறிவிக்கலாம்.

அவ்வாறாக பாதுகாக்கப்பட்ட பிரதே சம் (Archaeological Reserve) என்று அறிவிக் கப்பட்ட பிரதேசத்திற்குள் யாரும் விவசாயம் செய்ய முடியாது, எந்தவொரு கட்டிடமும் அமைக்க முடியாது, ஒரு மரத்தையேனும் வீழ் த்த முடியாது. அவ்வாறு செய்யுமிடத்து அவர் களுக்கு எதிராக தொல்லியல் தண்டனை சட்டக் கோவையின் கீழ் வழக்கு தொடரப்பட்டு 3 மாதம் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என இந்த சட்டம் குறிப்பிடுகின்றது.

அடுத்து பணிப்பாளர் நாயகத்தின் அதிகா ரங்களை பார்ப்போம், இது மிக மிக முக்கியமா னது. ஏனென்றால் தொல்லியல் திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகம் என்பது ஒரு மிகவும் அதிகாரமிக்க பதவியாக காணப்படுகின்றது. தேசிய தொல்லியல் கொள்கையை உருவாக்கி கொள்வதற்கான பொறுப்பை அரசாங்கத்தின் அனுமதியோடு பெற்றுக்கொண்டு, அதை உரு வாக்கி அதை அமுல்படுத்துகின்ற பொறுப்பு பணிப்பாளர் நாயகத்தினுடையது. இரண்டாவது தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரி யமான பிரதேசங்கள் எவை என்பதை பட்டியல் இட்டு கொள்வதற்கான அதிகாரம் அவருடை யது. அவற்றை பாதுகாப்பதற்கும் அவற்றை மேம் படுத்துவதற்குமான பொறுப்பு அவருடையது. அது தொடர்பான ஆய்விலே ஈடுபடுவதற்கான பொறு ப்பு அதிகாரம் அவருக்கு இருக்கின்றது. இது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டலை




> **பணிப்பாளர் நாயகம் ஏதேனும் நபர் ஒருவருக்கு தனது அதிகாரங்களை பாரமளிக்க கூடிய வகையில் செயற்படலாம் என்பதன் ஊடாக தொல்லியல் சட்டமே தொல்லியல் விடயங்கள் அரசியல் மயப்படுவதற்கான இடைவெளியை வழங்குகின்றது**

அவர் செய்யலாம். இவ்வாறான இடங்களுக்கு உள்நுழைவதற்கான கட்டணங்களை விதிக்கலாம். அபிவிருத்திகள் செய்யும் போது அதனால் தொல்லியலிற்கு ஏற்படக்கூடிய பாதிப்பு என்ன என்பது தொடர்பில் ஆராய்ந்து அது தொடர்பில் அரசாங்கத்திற்கும் உரிய தரப்பினருக்கும் ஆலோசனை வழங்குகின்ற பொறுப்பும் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இங்கு ஒன்றை கவனிக்க வேண்டும். தொல்லியல் என்கின்ற விடயம் 13 ஆவது திருத்தத்திலே சொல்லப்படுகின்ற 9 ஆவது பிரிவிலே மத்திய அரசாங்கத்திற்கு உரிய பொறுப்பாக இருக்கிறது. ஆகவே (archaeological policy) நிறைவேற்றுவதற்கான பொறுப்பும் மத்திய அரசாங்கத்திற்கு உரியது அல்லது மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் மாத்திரம் இருக்க கூடிய விடயமாக உள்ளது.

அடுத்து 43 ஆவது பிரிவு என்னைப் பொறுத்தவரையில் ஒரு விசித்திரமான பிரிவு. 1998 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட இந்த பிரிவு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமானவர் தனது அதிகாரங்களை யார் யாருக்கு பகிர்ந்தளிக்கலாம் என்பது தொடர்பாக சொல்கின்றது. பணிப்பாளர் நாயகம் பொதுவாகவும் சிறப்பாகவும் தனது அதிகாரங்களை யார் யாருக்கு பகிர்ந்தளிக்கலாம் என்று பார்த்தால், ஒருவர் மாவட்ட செயலாளர். அதாவது, தொல்லியல் திணைக்களத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு அலுவலகம் அமைக்க முடியாதவிடத்து அந்த மாவட்டத்தினது மாவட்ட செயலாளர் அதாவது அரச அதிபருக்கு அதிகாரங்களை வழங்கலாம். அல்லது தனது அதிகாரங்களை பிரயோகிக்குமாறு தனது திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிக்கு வழங்கலாம். அதிலும் பிரச்சனை இல்லை. அல்லது அரசாங்க அதிபரின் கீழ் மாவட்ட செயலாளரின் கீழ் செயற்பட கூடிய பிரதேச செயலாளருக்கு வழங்கலாம். அதிலும் பிரச்சனை இல்லை. ஆனால் பிரச்சனைக்கு உரிய ஒரு பிரிவு இருக்கின்றது.

43:1C இன் கீழ் அதாவது அகழாய்வு, பேணுகை, மீள் பேணுகை, பராமரிப்பு போன்ற விடயங்களை செய்ய கூடிய வளங்களும் விசேட நிபுணத்துவமும் உள்ள எந்தவொரு நபருக்கும் அவர் தனது அதிகாரத்தை வழங்கலாம். தற்பொழுது நீங்கள் செய்திகளிலே கேள்விப்பட்டிருப்பீர்கள். முல்லைத்தீவிலே இருக்க கூடிய குருந்தூர் மலை விகாரை தொடர்பாக வணக்கத்திற்குரிய கல்கமுவே சந்தபோதி தேரோ என்பவர் தற்பொழுது இராஜினாமா செய்துள்ள முல்லைத்தீவு நீதவான் அவர்களை முதலாம் எதிர் மனுதாரராக காட்டி CA 474 2023 என்ற வழக்கை 14.08.2023 அன்று தாக்கல் செய்திருக்கிறார். அதிலே அவர் இந்த பிரிவை சொல்லாமல் தான் குருந்தூர் மலை விவகாரத்திலே கவனம் செலுத்துவதற்கான காரணம் தொல்லியல் திணைக்களத்திற்கு போதுமான ளவு வளங்களும் ஆளணியும் இல்லாததால் தான் என்று சொல்கிறார். குறித்த வழக்கிலே பிரிவு 43:1C யின் கீழ் பணிப்பாளர் நாயகத்தால் தனக்கு அந்த அதிகாரம் உண்மையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதை குறித்த வணக்கத்திற்குரிய பிக்கு வழக்கிலே குறிப்பிடாவிட்டாலும் அவ்வாறான அதிகாரம் வழங்கப்பட கூடியதாக இருக்கின்றது என்பதே சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கிறது என்பது தான் எனது நிலைப்பாடு.

அரச உத்தியோகத்தர் அல்லாத ஒரு நபரிடம் பணிப்பாளர் நாயகம் தனது அதிகாரங்களை வழங்க கூடியவாறு ஏன் சட்டம் பிரிவு 43:1C இன் கீழ் ஏற்பாடு

> சட்டத்திற்கு உட்பட்டே தொல்லியலுக்குள் அரசியல் புகுவதற்கான இடைவெளியை சட்டமே செய்து கொடுக்கின்றது

செய்து வைத்திருக்கிறது? இது தொல்லியல் திணைக்களத்தின் வேலையிலே அரசியல் கலப்படம் உருவாகுவதற்கான இடத்தினை வழங்குகின்றது என்று நான் கருதுகின்றேன். இருப்பினும் ஒரு வழக்கை குறிப்பிட்டு இதனை முடிக்கலாம் என்று நினைக்கின்றேன்.

அண்மையில் தீர்க்கப்பட்ட 07.10.2022 Helagama vs ministry of buddhasasana CA 225/2022 என்ற வழக்கு ஒரு தனி நபர் தமது பிரதேசத்தில் உள்ள ஒரு தொல்லியல் பிரதேசத்தை தொல்லியல் சின்னங்களை தொல்லியல் திணைக்களம் பராமரிக்க தவறியுள்ளது ஆகவே தன்னிடம் அதனை கையளிக்க வேண்டுமென கூறி தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கிலே மாண்புமிகு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபித ராஜகருணா அவர்கள் இந்த மனிதர் ஏன் தனது செலவில் இதனை பாதுகாக்க போவதாக சொல்கிறார் என்பதை ஆராய்கிறார். அந்த நபரின் உண்மையான நலன் என்ன என்பதனை ஆராய்ந்து பார்த்த பொழுது, அவர் அந்த தொல்லியல் பிரதேசத்திற்கு பக்கத்திலே விவசாயம் செய்து வருகின்ற ஒரு நபராக காணப்படுகின்றார். ஆகவே அந்த காணியோடு சேர்த்து இந்த காணியையும் சேர்த்து ஆள வேண்டும் என்பதற்காகவே அவர் அந்த பிரதேசத்தை தன்னிடம் பொறுப்பு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார் என்பதை நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. எந்தவொரு தனி நபருக்கும் தொல்லியல் திணைக்களத்திற்கு உரிய இடத்தை கொடுத்து விட முடியாது என அந்த தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இது என்னைப் பொறுத்தவரையில் முக்கியமானது. இந்த தீர்ப்பிலே 43:1C ஐ பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. அதாவது பணிப்பாளர் நாயகம் விசேடமாக எந்தவொரு நபருக்கும் தனது அதிகாரத்தை குறித்தொதுக்கலாம் என்று சொல்கின்ற விடயம் சொல்லப்படாவிட்டாலும் தீர்ப்பிலே தனி நபர் ஒருவருக்கு தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை பராமரிப்பதற்கு உரிய அனுமதி வழங்கப்பட முடியாது என்பது சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தீர்ப்பு பொதுவாக அமுல்படுத்தப்பட்டால் மதத்தின் பெயரால் ஏற்படக்கூடிய தொல்லியல் சின்னங்களுக்கு அரசியல் சாயம் பூசுகின்ற ஒரு செயற்பாட்டை தடுத்து நிறுத்தலாம் என நான் நினைக்கிறேன். ஆகவே சட்டத்திற்கு உட்பட்டே தொல்லியலுக்குள் அரசியல் புகுவதற்கான இடைவெளியை சட்டமே செய்து கொடுக்கின்றது. 200 வருடத்திற்கு உட்பட்ட கட்டிடங்களை கூட தொன்மையான கட்டிடங்கள் என்று அறிவிக்க கூடிய அதிகாரம் அமைச்சருக்கு இருக்கின்றது. தங்களால் பல நூற்றாண்டுகள் பழமையானது என்று சொல்லப்படுகின்ற குருந்தூர் மலை விகாரை போன்ற இடங்களை கூட இந்த 200 வருடங்களுக்கு உட்பட்ட பிரிவு 16 இன் கீழ் தற்துணிவு அதிகாரங்களை கொண்டு தொன்மையான சின்னங்கள் என்று அறிவிக்கலாம். மற்றும் பிரிவு 43.1C இன் கீழ் பணிப்பாளர் நாயகம் ஏதேனும் நபர் ஒருவருக்கு தனது அதிகாரங்களை பாரமளிக்க கூடிய வகையில் செயற்படலாம் என்பவற்றின் ஊடாக தொல்லியல் சட்டமே தொல்லியல் விடயங்கள் அரசியல் மயப்படுவதற்கான இடைவெளியை வழங்குகின்றது.

இந்த சட்டத்தை அதனூடாக கிடைக்கும் அதிகாரங்களை பொது நம்பிக்கையாக வைத்து செயற்படுத்தல் என்ற விடயத்தை வைத்து பார்க்கின்ற பொழுது, தொல்லியல் சின்னங்களை பொது நோக்கத்துக்காக அதாவது அனைத்து மக்களையும் உள்வாங்குகின்ற நோக்கத்திற்காக செயல்படுத்துகின்ற விதத்திலே சட்ட ரீதியாக போராடுவதற்கான இடைவெளி இருக்கிறது. வெற்றி தோல்வி மறுபுறம், ஆனால் அரசியல் மயப்படுத்தப்பட்ட இந்த சட்டத்தையும் நாங்கள் வினைத்திறனாக முழுமையாக விளங்கி முழுமையான பார்வையின் அடிப்படையில் நாங்கள் சிந்தித்து செயற்படும் போது எம்மிடமிருந்து பறிக்கப்படுகின்ற எமது வரலாற்றை ஓரளவுக்காவது நாம் எம்மகத்தே வைத்திருப்பதற்கான முயற்சியில் ஈடுபடலாம் என நான் கருதுகின்றேன். முயற்சி திருவினையாக்கும்.



# தொல்லியலில் மதமும் அரசியலும்... சட்டம் சொல்வதென்ன ?




கலாநிதி கு.குருபரன்

யாழ்ப்பாணம் சட்டம் மற்றும் கொள்கைகளுக்கான கற்கை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், சட்டத்தரணியுமான கலாநிதி கு.குருபரன் அவர்கள் அந்த கற்கை நிலையத்தின் காணொளி ஊடகம் ஊடாக பொதுமக்களுக்கு சட்டங்களை தெளிவுபடுத்தும் நோக்கில் “அறம் பேசு” என்கிற தொடரில் பேசி வருகிறார். அதில் இரண்டாவது அத்தியாயமாக “தொல்லியலில் மதமும் அரசியலும்... சட்டம் சொல்வதென்ன?” என்ற தலைப்பின் கீழ் பேசிய விடயங்களின் தொகுப்பு வருமாறு.

இந்த தலைப்பினுடைய முக்கியத்துவம் பற்றி எதையும் விரிவாக சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சமகாலத்திலே குருந்தூர் மலையை ஒட்டி நடைபெற்ற சம்பவங்கள் அது தொடர்பாக நடைபெற்ற வழக்கு, அதை விசாரித்த நீதிபதி பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு சென்றுள்ளமை போன்றவை தொல்லியல் திணைக்களத்தினுடைய அதிகாரங்கள் எவை என்பது தொடர்பாக பொது தளத்திலே பல கேள்விகளை முன்னிறுத்துகின்றன. அதற்கு ஒரு மேலோட்டமான விடையை வழங்கும் நோக்கிலாவது இந்தக் காணொளியை பதிவு செய்கின்றோம். தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரங்கள் தொல்பொருள் சின்னங்கள் தொடர்பான சட்டம் ஆங்கிலேயரினுடைய ஆட்சி காலத்திலே 1940 ஆம் ஆண்டு 9ஆம் கட்டளை சட்டமாக நிறை வேற்றப்பட்டது. 1955 ஆம் ஆண்டு அது திருத்தப்பட்டது. பின்னர் நீண்ட காலம் திருத்தப்படாமல் இருந்து 1998 இலும் பின்னர் இறுதியாக 2005 ஆம் ஆண்டிலும் இந்த சட்டம் திருத்தப்பட்டது. அதன் பிரகாரம் தொன்மை என்ற சொல்லின் வரைவிலக்கணமானது அந்த சட்டத்தில் பிரிவு 48 இல் சொல்லப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 23.10.2023 அன்று வெளியிடப்பட்டது.